டெரிக் பிரின்ஸ்

விட்டுக் கொடுத்தலின் கிருபை

Derek Prince Ministries - India

Copyright Derek Prince Ministries International

"**VITTUKODUTHALIN KIRUBAI**"

This book was compiled from the extensive archive of Derek Prince's unpublished materials and edited by the Derek Prince Ministries editorial team.

"GRACE OF YIELDING" (Tamil)

International Copyright © 2016
Local Copyright © 2024

2000/0524/LOP

Published by DPM India
C/o DPM EXIM
A-40, Anna Nagar Main Road,
Sivapragasam Salai, Tennur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201/03

ISBN : 978-93-92947-85-8
BK-B030-200-TAM

No part of this publication may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording, or by means of any information storage and retrieval system, without permission in writing from the publisher.

Derek Prince Ministries - India
www.derekprince.com/ta

Derek Prince
MINISTRIES INDIA

பொருளடக்கம்

முன்னுரை.....5

1. ஆவிக்குரிய வல்லமையின் அளவு.....7
2. நம் சுயத்திற்கு இடம் தராதிருத்தல்.....11
3. கிறிஸ்துவின் ஆவி.....15
4. விட்டுக்கொடுக்க விரும்புதல்.....23
5. நீ இப்பொழுது உன் மகனை அழைத்துக் கொண்டு போ.....33
6. கோதுமை மணி தனித்திருந்தால்.....47
7. கடந்து செல்ல அனுமதித்தல்.....56

முன்னுரை

கிறிஸ்தவர்களாகிய நாம் சில விஷயங்களில் ஒருபோதும் விட்டுக் கொடுப்பதில்லை. சாத்தானுக்கு நாம் விட்டுக்கொடுக்க வேண்டுமென்று நான் கூறவில்லை. ஏனெனில் பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அவன் உங்களை விட்டு ஓடிப்போவான் என்று வேதம் கூறுகிறது. அதே போல பாவத்திற்கும் நாம் விட்டுக் கொடுக்கக் கூடாது. ஏனெனில் ரோமருக்கு எழுதிய நிருபம் ஆறாம் அதிகாரத்தில் நமது அவயவங்களில் பாவம் ஆளாதிருப்பதாக என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் நமது வாழ்க்கையில் சில சூழ்நிலைகளும் சந்தர்ப்பங்களும் நாம் விட்டுக்கொடுக்க நம்மைப் பயிற்றுவிக்கிறது.

இது முதிர்ச்சியின் அடையாளமாகக் கருதப்படுகிறது. எப்படி விட்டுக் கொடுப்பது என்பது ஆவிக்குரிய முதிர்ச்சியின் அடையாளமாக இருப்பதால் இப்பண்பு பிறரிடத்திலும் என்னிலும் காணப்படவேண்டுமென விரும்புகிறேன். தேவன் மிகவும் அதிகமாக ஆசீர்வதித்த இளம் போதகர் ஒருவர் பேசுவதை நான் ஒருமுறை கேட்டுக் கொண்டிருந்தேன். அவர் ஒரு சிறந்த மனிதர். தேவன் அவருக்கு அநேக காரியங்களைச் செய்திருந்தார். அவரது பிரசங்கம் முழுவதும் தான் என்ன செய்யக்கூடும் என்பதைப் பற்றியே இருந்தது. அது உண்மையானதாகவும் சிறந்ததாகவும் இருந்தது. ஆனால் நான் உட்கார்ந்து கொண்டு எனக்கு நானே கூறிக்கொண்டது: இதற்கு ஒரு முடிவு ஏற்படவேண்டும். ஏனெனில் நம்முடைய செயல்களுக்கு ஒரு முடிவு ஏற்படும்போது நாம்

ஆண்டவரிடத்தில் நெருங்கி வருகிறோம். நம்முடைய சரீர முயற்சியினாலோ, கல்வி அறிவினாலோ நாம் செய்யக்கூடிய காரியங்களைக் குறித்து நான் பேசவில்லை. தேவன் நமக்கு அருளிய ஊழியத்திலும் கூட, தெய்வீகத் தீர்மானத்தின்படி, செயலிழந்து நிற்கும் கட்டத்திற்கு நாம் வருவோம். இதை உணர்ந்து கொள்ளாது இருப்பதே அநேகருடைய பிரச்சனை.

பல்லாண்டுகளாக என்னில் தேவனுடைய ஈடுபாடு ஏற்படுத்திய விளைவுகளைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். கிறிஸ்தவ வாழ்வில் விட்டுக் கொடுத்தலின் கிருபையைக் குறித்த பல வேத வசனங்களையும் உதாரணங்களையும் கொடுக்க விரும்புகிறேன்.

1
ஆவிக்குரிய வல்லமையின் அளவு

இந்த தலைப்பைக் குறித்து நான் விவரிப்பதற்கு முதலாவது எடுத்துக் கொண்ட வசனம் ரோமர் 15ம் அதிகாரம் முதலாம் வசனம் ஆகும்.

> *அன்றியும், பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும்.*

இது வேதம் குறிப்பிடும் பலம் என்று நான் நினைக்கிறேன். நீங்கள் எந்த அளவுக்குக் காரியங்களைச் செய்ய முடியும் என்பதல்ல. மற்றவர்களுடைய பலவீனங்களை எந்த அளவுக்கு உங்களால் தாங்க முடியும் என்பதுதான் முக்கியம். உங்களுடைய சொந்த அனுபவத்தில், சொந்த ஊழியத்தில், சொந்த திறமையில் மிகவும் சக்தி வாய்ந்தவர்களாகவும், எல்லாவற்றையும் தீர்வு செய்யும் சக்தி படைத்தவர்களாகவும் இருப்பது மிகவும் நல்லதுதான்; ஆனால் இது உங்களுக்கு ஆவிக்குரிய பலத்தைத் தராது. மற்றவர்களுடைய பலவீனத்தைத் தாங்க உங்களுக்கு ஆவிக்குரிய பலம் தேவை.

நாம் எந்த அளவுக்கு மற்றவர்களுடைய பலவீனங்களைத் தாங்குகிறோமோ அந்த அளவின் அடிப்படையிலேயே வேத வாக்கியங்களும் தேவனும் நமது ஆவிக்குரிய பலத்தை அளவிடுகின்றனர். என்னைப் பொருத்தவரை இது மிகவும் கடினமானதாகும்.

தற்காலப்போக்கு முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. இக்கால சூழ்நிலையின் தன்மை: "உங்களுக்குத் தேவை எதுவோ அதனைப் பெற்றுக் கொள்ளுங்கள்; பலவீனர் தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ளட்டும்" என்பதே.

மிகவும் பயங்கரமான வெறுக்கத்தக்க காரியமாகிய கருக்கலைப்புக் குறித்து சமீபத்தில் நான் யோசித்துக் கொண்டிருந்தேன். மக்களோடு இது குறித்து விவாதிக்கும் போது இதனை இவ்வாறு நியாயப்படுத்திப் பேசுவார்கள்: இந்த உலகத்தில் தேவையற்ற குழந்தைகள் பிறப்பதைத் தடுப்பதோடு, முறை தவறிய குழந்தைகளால் குடும்பங்களில் தாய்மார்க்கு ஏற்படும் பிரச்சினைகளிலிருந்து விடுதலை கிடைக்கும். தாயின் கர்ப்பத்திலிருந்து வெளிவரும் முன்பே அவற்றை நாம் கொலை செய்கிறோம். இக்காரியத்தில் உச்சநீதிமன்றமோ அல்லது வேறு எவரோ சொல்வதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் தேவன் இதனைக் கொலை என்றே வரையறுக்கிறார். இதனை அனுபவத்தின் மூலமாய் உணர்ந்திருக்கிறேன். மேலும் வேதத்தில் இது குறித்து தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

ஆனால் நான் குறிப்பிட விரும்பும் காரியம் இதுதான்: நமக்குச் சரியென்று தோன்றுவதை அளவு கோலாகக் கொண்டு நாம் செயல்படும்போது, பயங்கரமான குழப்பத்திற்குள் நாம் விழுவோம். அடுத்தடுத்து மற்றக் காரியங்களும் பின் தொடரும்: "நம்பிக்கையற்ற நிலையில் ஊனமாகப் பிறக்கும் அந்தக் குழந்தையின் நிலை என்ன? அந்த குழந்தையை நாம் ஏன் உயிரோடு வைக்க வேண்டும்?"

கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள நீதிமன்றத்தில் ஒரு வழக்கு இருந்தது. நம்பிக்கையற்ற நிலையில் பிறந்த ஒரு

குழந்தைக்கு ஆகாரம் கொடுக்க பெற்றோர் மறுத்தனர். முடிவில் அக்குழந்தை இறந்துவிட்டது. இதேபோல் ஊனமுற்றவர்களிடமும் நாம் நடக்க ஆரம்பித்தால் தொடர்ந்து வயது முதிர்ந்தவர்கள், மனவளர்ச்சி குன்றியவர்களிடமும் இதே நிலை ஏற்படக்கூடும். பிறகு ஒவ்வொருவராக மனுக்குலத்திலிருந்து மறைந்து போவர்.

கிறிஸ்தவ முறையில் இது பதிலல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கருக்கலைப்பு தேவனால் தடைசெய்யப்பட்டுள்ளது. மேலும் இச் செயல் கிறிஸ்தவ முறைகளுக்கு முரண்பட்டது. கிறிஸ்தவர்களாகிய நாம் வலிமை குறைந்தோரை அழித்தொழிக்கக்கூடாது. மேலும் அவர்களைச் சரிவர கவனிக்க இயலாத காப்பகங்களுக்கும் அனுப்பி வைக்கக் கூடாது.

முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களைப் பற்றிய நற்சாட்சி என்னவென்றால் அவர்கள் எளியவர்களைக் குறித்து கரிசனையோடு நடந்து கொண்டனர். அவர்கள் சுகவீனமானவர்களைக் கவனித்தனர். அவர்களை சாகடிக்கவில்லை. இதுதான் பூர்வீக உலகமக்களை மிகவும் கவர்ந்தது. தேவை மிகுந்த மக்களுக்கும், ஏதுமற்ற ஏழைகளுக்கும் இந்த கிறிஸ்தவர்கள் உதவக் காரணமென்ன என்று அவர்களுக்குப் புரியவில்லை. மனித தேவைகளைச் சந்திப்பது பலவீனமான செயல், புத்தியுள்ள செயலன்று என்று உலகம் எண்ணுகிறது.

பெலவீனமானோர், எதுவும் செய்ய இயலாதோர், ஊனமுற்றோர், பெலவீனமான விசுவாசிகள் போன்றவர்களே நமது ஆவிக்குரிய பெலனைக் கணிக்கும் கருவிகள். இங்கிலாந்து நாட்டிலும் சொல்லப்போனால் மற்ற நாடுகளிலும்

கூட அங்கு நிலவும் கலாச்சார வரம்பினை அவ்வாறே பின்பற்றுவது அரிதாக உள்ளது. நான் ஒரு கிறிஸ்தவனானால் கலாச்சார சட்டம் அனுமதிப்பதையே செய்வதாக என்னைத் திருப்திப்படுத்திக் கொள்ள முடியாது. என் பிரதான நோக்கம் இயேசு கிறிஸ்துவை திருப்திப்படுத்துவதாகும். நாம் இயேசுவை மகிமைப்படுத்தி வாழக் கற்றுக் கொள்ளும்போது நம்மைச் சுற்றியுள்ள மனந்திரும்பாத மக்களிடமிருந்து மாறுபட்ட நல்ல வாழ்க்கையை வாழ நம்மால் இயலும். கொள்கைகளைப் பற்றிப் பிடிக்காமல் இயேசுவைப் பிரியப்படுத்தும் போது நாம் நம்மை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் கொள்ளுகிறோம்.

2
நம் சுயத்திற்கு இடம் தராதிருத்தல்

"நம்மை நாமே பிரியப்படுத்தாதிருப்போமாக" என்று பவுல் கூறுகிறார். நான் என்ன கற்றுக் கொண்டேன் என்று உங்களுக்குத் தெரியுமா? நான் என்னைப் பிரியப்படுத்தாத போது மட்டுமே தேவனுடைய பார்வைக்கு உகந்ததாக, கர்த்தருக்காக எதையாகிலும் என்னால் செய்ய முடிகிறது. நான் கற்றுக் கொண்ட மிக முக்கியமான பாடம் இதுதான்: நான் என்னை பிரியப்படுத்த முயற்சிக்கும் ஒவ்வொரு முறையும் தேவனுக்கு மகிமையாக நான் ஒன்றையும் செய்ய முடிவதில்லை. நான் செய்ய வேண்டிய முதல் காரியம், என் சுயத்தை மறுதலிப்பதாகும். என்னுடைய சுயம் எப்பொழுதும் எனக்குள்ளாக, "நான் விரும்புகிறேன், நான் யாசிக்கிறேன், நான் உணருகிறேன், நான் நினைக்கிறேன், என்னை நீங்கள் கேட்டால், நான் இதனை விரும்புகிறேன் ..." இப்படியாகக் கூறிக் கொண்டிருக்கும். இதனை நான் மறுதலிக்க வேண்டும். நான் இதற்கு "இல்லை" என்று மறுப்பு கூற வேண்டும்.

தன்னை ஒறுத்தல் என்பது நமது விருப்பங்களுக்கு மறுப்புத் தெரிவிப்பதாகும். நமக்கே 'வேண்டாம்' என்று கூறுவதே சுய வெறுப்பு. உன் விருப்பங்களுக்குத் தொடர்ந்து மறுப்புத் தெரிவிக்காது ஒப்புதல் அளித்தல் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு முரணானது. தன்னைத் திருப்திப்படுத்துபவன் கிறிஸ்துவை

திருப்திப்படுத்த முடியாது. அது சாத்தியமன்று. லூக்கா 9:23ல்:

> *"பின்பு அவர் (இயேசு) எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அதுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்." எனக் கூறுகிறார்.*

இயேசுவைப் பின்பற்றத் தீர்மானித்த நீங்கள் முதலாவது செய்ய வேண்டிய காரியம் என்ன? முதலாவது படி, அவன் என்ன செய்ய வேண்டும்? தன்னைத் தான் வெறுக்க வேண்டும். இந்தத் தீர்மானத்தை எடுக்கும் வரையில் உங்களால் இயேசுவைப் பின்பற்ற முடியாது. தொடர்ந்து இவ்வாறு கூறுகிறார்: "தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்."

"அனுதினமும்" என்ற வார்த்தையை நான் விரும்பியதில்லை. மத்தேயு 16:24ல் இதே வசனம் கூறப்பட்டுள்ளது. ஆனால் அங்கே "அனுதினமும்" என்ற வார்த்தை கூறப்படாமல், "தொடர்ந்து" என்ற அர்த்தத்தில் தொனிக்கிறது. இங்கே லூக்கா 9:23ல் "தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்கிறார். "அனுதினமும்" என்ற வார்த்தையை இயேசு உபயோகிக்கிறார். ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒவ்வொரு நாளும் தனது சிலுவையை எடுத்துக் கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுகிறது. நீங்கள் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவீர்களென்றால் அன்றையத்தினம் உங்களுக்கு ஒரு வெற்றியின் நாளாகும். அந்த சந்தர்ப்பத்தை நழுவவிடுவீர்களென்றால் அந்த நாள் உங்களுக்குத் தோல்வியின் நாளாகும்.

சிலுவை என்றால் என்ன? என்னைப்போல ஒரு ஊழியக்காரர் ஒருவர் இவ்வாறு கூறினார்: "உங்களுடைய சித்தமும் தேவனுடைய சித்தமும் ஒன்றையொன்று சந்திக்கும் இடம்தான் சிலுவையாகும்." உங்களுடைய சிலுவையில் நீங்கள் மரிக்க வேண்டும். உங்களுடைய வாழ்க்கையை வைக்கும் இடம் இதுதான். இயேசு சிலுவையிலறையப்படும்போது இவ்வாறு கூறினார்: "ஒருவனும் என்னுடைய ஜீவனை என்னிலிருந்து எடுக்க முடியாது. அதனை இழக்கவோ, பெற்றுக் கொள்ளவோ எனக்கு அதிகாரமுண்டு." இதனடிப்படையில் உங்களிடமிருந்து ஒருவரும் உங்கள் ஜீவனை எடுக்க முடியாது. அதனை நீங்கள் ஒப்படைக்க முன்வரவில்லை என்றால், அது இன்னும் உங்கள் கட்டுப்பாட்டிலிருக்கிறது என்று பொருள்.

அன்பான சகோதரனே உன் மனைவி உனக்கு சிலுவையல்ல. அதேபோல அன்பான சகோதரியே உன் கணவனும் உனக்கு சிலுவையல்ல. அது போன்றே நீ வெறுக்கும் தீராத நோயும் உன் சிலுவையன்று. நீங்கள் உங்களைப் பிரியப்படுத்தக் கூடாது என்று தீர்மானம் செய்யும் இடம் சிலுவையாகும்.

எனது சொந்த அனுபவத்தில் பலமுறை இவ்வாறு நான் சரியான தீர்மானத்தை எடுக்கும்போது ஆசீர்வாதம் தொடர்ந்து வருவதைக் கண்டிருக்கிறேன். அவ்வாறு இல்லை என்றால் என்னால் ஊழியம் செய்ய இயலாது. என்னை நான் பிரியப்படுத்தும் வரை என்னால் ஊழியத்தை நிறைவேற்ற முடியாது. "நான்" என்ற தன்னலம் எவருக்கும் ஒருபோதும் பயன்படாது. தேவனுடைய ஊழியத்தைச் செய்யும் முன்பதாக இதனை நான் சரிப்படுத்த வேண்டும். இதனை "நீங்கள்

அனுதினமும் செய்ய வேண்டும்" என்று இயேசு நமக்கு நினைவூட்டுகிறார்.

நமது சித்தமும் தேவனுடைய சித்தமும் ஒன்றை ஒன்று சந்திக்கும் சூழ்நிலை பலமுறை உங்களுக்கும் எனக்கும் ஏற்பட்டிருக்கிறது. இதனைத் தற்செயலானதாக நினைக்காமல் தேவன் நமக்குக் கொடுத்த ஒரு சந்தர்ப்பம் என்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

3
கிறிஸ்துவின் ஆவி

நம்மை நாமே ஒறுத்து தினமும் சிலுவையை எடுத்துக்கொண்டு செல்லும் செயலானது நமது சுய எண்ணத்திற்கு நேர் மாறானதாகும். சாதாரண மனிதனின் நினைவுக்கு முற்றிலும் எதிர் மறையானதாகும். சவாலான ஆராய்ச்சிக்குரிய ஓரிரு வேத வசனங்களை நான் உங்களுக்குக் கூற விரும்புகிறேன். நான் குறிப்பிட விரும்பும் முதல் வசனம் 1 கொரிந்தியர் 1:25 ஆகும்.

இந்தப்படி, தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது; தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது.

இக் கூற்று புதிராகத் தோன்றலாம். தேவனுடைய பெலவீனம் என்பது நம்முடைய பலத்திலும் அதிகமானதாகவும்; தேவனுடைய அறிவீனம் என்பது மனிதனுடைய ஞானத்திலும் மேலானதாகவும் உள்ளது. தேவனுடைய பெலவீனமும் அறிவீனமும் ஓரிடத்தில் முழுமையாகக் காணப்படுகிறது. அதுவே *கல்வாரிச் சிலுவை.* சிலுவையின் பெலவீனத்திலும் அறிவீனத்திலும் தேவன் இவ்வுலகத்தின் முழு பெலத்தையும் ஞானத்தையும் வெற்றிகண்டார். இப்படிப்பட்ட பெலவீனத்தையும் அறிவீனத்தையும் குறித்து நாம் கற்றுக்கொள்ள வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

என் சொந்த ஆள்த்தத்துவத்தில் பிடிவாதத்தைக் காட்ட யாரும் சொல்லித்தர வேண்டியதில்லை. ஏனென்றால் அது பெலப்பட்டு வருவதையும் தேவனால் ஆசீர்வதிக்கப்படுவதையும் நான் காண்கிறேன். ஆனால் இது என்னை ஒரு குறிப்பிட்ட வளர்ச்சி வரைக்குமே கொண்டு செல்லும். நான் விரும்பினால், அங்கேயே தேங்கி நின்றுவிடலாம். என்னை இன்னும் முன்னேறும்படி யாரும் கட்டாயப்படுத்துவதில்லை. என் வாழ்வும் ஊழியமும் இந்தக் கட்டத்தில் நின்று விடும்.

இதைக் குறித்த மற்றொரு வேத வாக்கியத்தைப் பார்க்கலாம்: ரோமர் 8:9

> *தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல.*

கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பில் இது வேறு அர்த்தம் தோன்றுமாறு கூறப்பட்டுள்ளது. முற்றுப்புள்ளி வைக்கப்பட்ட இருவாக்கியங்களாக இது வருகிறது. வசனங்களாகப் பிரிக்கும் பொறுப்பு என்னிடம் இருந்திருக்குமாயின், இதை இரு தனிப்பட்ட வசனங்களாகப் பிரித்திருப்பேன். முதலில் கூறப்பட்டபடி முதற்பகுதி "தேவனுடைய ஆவியைப்பற்றியும்" இரண்டாம் பகுதி 'கிறிஸ்துவின் ஆவி' பற்றியும் கூறுகிறது. இவ்விரு ஆவிகளிலும் பிரிவில்லை. ஆனால் தேவனுடைய பண்பை எடுத்துக் காட்டும் நிலையில் வித்தியாசத்தைக் காணலாம்.

வேதாகமம் முழுவதும் "தேவனுடைய ஆவி" என்பது "பரிசுத்த ஆவியை" குறிப்பதாக அமைந்துள்ளது. தேவத்துவத்தின் மூன்றாவது நபராகிய தேவனுடைய

ஆவியைக் குறிக்கும் பதமாக இது உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இது பிதா மற்றும் குமாரனுக்கு சமமானதாகவும் தேவனாகவே கருதப்படுவதாகவும் உள்ளது. உதாரணமாக அப். 13:2ல் "பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார்." இங்கு தேவனுடைய ஆவியானவர் தேவனாகிய தன்னை "நான்" என்ற பதத்தில் அழைப்பதைக் காணலாம். அதிகாரமும் வல்லமையும் இங்கு முக்கியத்துவம் பெறுகிறது.

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையின் மூலமாக வெளிப்படுத்தப்பட்டுள்ள தெய்வீகத் தன்மையை "கிறிஸ்துவின் ஆவி" வெளிப்படுத்துகிறது என்று நான் நம்புகிறேன். இயேசுவின் தன்மை மற்றும் அவருடைய ஆள்த்தத்துவத்தினின்று இதனை வேறுபடுத்த முடியாது. உண்மையான தேவனுடைய பிள்ளை இத்தகைய ஆவியை உடையவனாக இருப்பதாக பவுல் கூறுகிறார்: "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல".

எனக்குத் தெரிந்த அநேகர் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்று அந்நிய பாஷைகளில் பேசி, அற்புதங்கள் செய்தாலும் அவர்கள் கிறிஸ்துவின் ஆவியை உடையவர்களாயிருப்பதாகக் காட்டிக் கொள்வதில்லை. எனவே அந்நிய பாஷைகளில் பேசுவதோ, அற்புதங்கள் செய்வதோ, நல்ல பிரசங்கங்கள் செய்வதோ நம்மை தேவனுடையவர்களாகக் காட்டி விடாது. *கிறிஸ்துவின் ஆவியை உடையவர்களே தேவனுடையவர்கள்.* கிறிஸ்துவின் ஆவி என்றால் என்ன என்று என்னை யாராவது கேட்டால் அது எளிமையின் ஆவி, தாழ்மையின் ஆவி, கண்ணியமான ஆவி என்று நான் கூறுவேன். அது கொடூரமான, சுயத்தைத் திருப்திப்படுத்தும் ஆவியல்ல.

உண்மையான தேவனுடைய பிள்ளையை வெளிப்படுத்தும் ஆவி கிறிஸ்துவின் ஆவி.

உனக்குச் சொந்தமான சுதந்தரங்களைச் சுதந்தரித்துக் கொள் என்னும் போதனை அதிகமாகக் கொடுக்கப்பட்டு வருவதைக் கேட்டுள்ளோம். நானும் 3 யோவான் 2ம் வசனத்தைப் பயன்படுத்தி பல பிரசங்கங்கள் செய்திருக்கிறேன்: "பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்." இதனை விசுவாசிப்பதற்கு தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். ஆனால் தேவனுடைய பார்வையில் உன் உரிமைகளைப் பற்றி பேசுவதால் மட்டும் அதைப் பெற்றுக் கொள்ள முடியாது. வளமை, ஆரோக்கியம், உள்ளான சமாதானம், ஆத்தும ஆரோக்கியம் போன்றவை புதிய படைப்பின் உரிமை. ஆனால் பல தடவைகள் பழைய மனிதனால் சுயநலமாய் இது பயன்படுத்தப்படுகிறது.

"சகோதரனே! உரிமை பாராட்டி கேள்" என்று கூறும்பொழுது இதில் பிழையுள்ளது என்று என்னில் உணருகிறேன். இவ்வார்த்தைகளைக் கேட்கும் போது, ஒரு முரட்டாட்டமுள்ள மனிதன் சுய நலத்தோடு தன் உரிமைகளுக்குச் சண்டையிடுவதுபோல் உள்ளது. தன் உரிமைகளைப் பற்றியே பேசுகின்ற ஒருவருடன் எவ்வளவு காலம் தொடர்ந்து வாழமுடியும்? கிறிஸ்துவில் எனக்குள்ள உரிமைகளைச் சட்ட ரீதியில் சொந்தம் என உரிமை பாராட்டிக் கேட்பதிலும் விட்டுக் கொடுத்துப் பெறுவதில் சிறப்புள்ளது.

எப்படி சுகமாக வாழ்வது? வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைவது எப்படி? என்பது குறித்து கிறிஸ்தவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் எனக்கு ஆவல் உள்ளது.

உண்மையாகவே இது அவர்களுக்குத் தேவை. ஆனால் சகோதரனே சகோதரியே சுகமாக இருப்பதற்கும் செழிப்பாக வாழ்வதற்கும் கற்றுக்கொள்ளும்போது நீங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் துவக்கப்பள்ளியைத் தாண்டிவிட்டதாக அர்த்தம் அல்ல. உங்களுக்கு இருக்கின்றவைகளிலோ அல்லது மற்றவர்களுக்கு மாதிரியைக் காண்பிப்பதிலோ உங்கள் பலம் இல்லை. பெலவீனரின் பெலவீனத்தைத் தாங்குவதில் தான் உங்கள் பலம் உள்ளது.

கிறிஸ்துவின் ஆவி விட்டுக் கொடுக்கும் ஆவி. விட்டுக்கொடுப்பது எப்படி என்பதற்கு அவர் ஒரு மிகச் சிறந்த உதாரணம். இந்த அவருடைய சிறந்த குணாதிசயமே சாத்தானுக்கும் அவருக்குமுள்ள வித்தியாசத்தை எடுத்துக் காட்டியது. பிலிப்பியர் 2:6இல் இயேசுவைப்பற்றி இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்,

இது பழைய மொழிபெயர்ப்பு. புதிய மொழிபெயர்ப்பில் (புதிய அமெரிக்க வேதாகமம்) "அவர் தேவனோடு சமமாக இருப்பதை அடைந்து கொள்ளும் பொருளாக நினைக்கவில்லை." இவ்விரண்டிலும் வித்தியாசம் உங்களுக்குத் தெரிகிறதா? தேவனோடு சமமாக இருக்கும் உரிமை இயேசுவுக்கு இருந்தது. தெய்வத்தன்மை மற்றும் சுதந்திரத்தின் அடிப்படையில் அவர் இதனைப் பெற உரிமை இருந்தது. ஆனால் அதைப் பெற அவர் முயற்சிக்கவில்லை. சாத்தானாக மாறிய லூசிபருக்கு தேவனோடு சமமாக இருப்பதற்கு எந்த உரிமையும் இல்லை. ஆனால் அதனைப் பெற முயற்சித்து அவன் வீழ்ச்சியடைந்தான்.

இந்த இரண்டிற்கும் உள்ள வித்தியாசம்: பெற முயற்சிப்பதும், பெறுவதற்காகத் தன்னை ஒப்புக்கொடுப்பது அல்லது விட்டுக்கொடுப்பதும் ஆகும். நம்முடைய தேவைகளைக் கோரி பெறுவதிலும், வேண்டிக் கேட்டுக்கொள்வதிலும் கிறிஸ்துவின் ஆவி வெளிப்படுகிறதா என்று நான் அதிகமாக யோசித்துப் பார்க்கிறேன்.

நமது கிறிஸ்தவ சமுதாயம் இந்தப் பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியுள்ளது என நான் உணருகிறேன். மெய்யான தீர்க்கதரிசிகளுக்கும் பொய்யான தீர்க்கதரிசிகளுக்கும், உண்மையான ஊழியங்களுக்கும் பொய்யான ஊழியங்களுக்கும், ஆவியில் உண்மையாய் தேவனுக்கு ஊழியம் செய்பவர்களுக்கும் அப்படி செய்யாதவர்களுக்கும் உள்ள வேறுபாட்டை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அற்புதங்கள் இந்த வித்தியாசத்தைக் காட்டும் அளவுகோலல்ல. வித்தியாசத்தைக் காட்டும் காரியம், கிறிஸ்துவின் ஆவியாகும். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல.

கிறிஸ்தவ இயக்கங்கள் குறித்து நான் என்ன நினைக்கிறேன் தெரியுமா? இரண்டு அலைகளுக்கு இடையே உள்ள இடைவேளை என்று நான் எண்ணுகிறேன். ஒரு அலை வந்து போன பின்பு அடுத்த அலை வருகிறது. அதற்கு இடையில் குழப்பம் இல்லையா? பலவித அழுக்கு, குப்பைகள் நிறைந்து அங்கு ஒரே குழப்பம் ஏற்படுகிறது. இரண்டு சக்திகள் ஒன்றுக்கொன்று எதிர் திசையில் செல்லுகின்றன. இதுதான் கிறிஸ்தவத்தின் நிலை. இது தேவனுடைய நோக்கமல்ல. ஒழுக்கமாகவும், சீரானதாகவும், கிறிஸ்துவை மகிமைப்படுத்துவதாகவும், தாழ்மையையும், சகோதர அன்பையும், தன்னைவிட மற்றவர்களை மதிக்கும்

தன்மையையும் உருவாக்கக் கூடியதாகவும் ஒரு நிலை ஏற்படப்போகிறது.

தேவனுடைய மனிதன், விசுவாசத்திலும் வல்லமையிலும் நிறைந்து காணப்படும் நாள் நெருங்கியிருக்கிறது. இப்படிப்பட்ட மனிதனைக் குறித்துப் பலவிதமான குறைபாடுகள் வராமலிருக்காது. பல சமயங்களில் பலவிதமுறைகளில் தேவன் கிரியை செய்கிறார் என்பதை நாம் உணர வேண்டும். எப்பொழுதும் அவர் ஒரே காரியத்தைச் செய்து கொண்டிருப்பதில்லை. சில கிறிஸ்தவர்கள் இதனை ஏற்றுக்கொள்வதில்லை. அவர்கள் வெற்றிகரமான ஒரு வழியைப் பின்பற்றி சாகும் வரை அதையே செய்து கொண்டிருப்பார்கள்.

அப்போஸ்தலர் 17:30ல் பவுல் அத்தேனே பட்டணத்தாரைப் பார்த்துக் கூறிய காரியத்தை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். பல்லாண்டுகளாக அவர்கள் பின்பற்றி வந்த விக்கிரக ஆராதனை முறைகளைப்பற்றி இவ்வாறு கூறுகிறார்: "அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார்". காணாமலிருப்பது என்பது உங்களுடைய கண்களை வெகுநேரம் மூடிக்கொண்டிருப்பதாகும். சில காலமாக தேவன் அறியாமையைக் காணாதவர் போல இருந்தார்.

பத்து ஆண்டுகள் தேவன் என்னுடைய காரியங்களைக் காணாதவர்போல் இருக்கட்டும் என்று சிலர் வாதிட்டுப் பேசுவர். ஆனால் அப்படி அவர் இருக்க முடியாது. அப்போது தேவன் காணாதவர் போலிருந்தார்; ஆனால் இப்போது அவர் தனது இரு கண்களையும் திறந்து கொண்டிருக்கிறார். தேவன் உங்கள் காரியங்களைப் பார்த்துக் கொண்டிருந்து "நீங்கள் மாற

வேண்டும்" என்று கூறும்போது, நான் உங்களுக்குக் கூறும் அறிவுரை: நீங்கள் உங்களை மாற்றிக்கொள்ளுங்கள். இல்லாவிட்டால் நீங்கள் பாடம் கற்றுக் கொள்ள தேவன் வேறு வழிகளை வைத்திருப்பார்.

4
விட்டுக்கொடுக்க விரும்புதல்

விட்டுக் கொடுத்தல் குறித்து சில உதாரணங்களைக் கூற விரும்புகிறேன். ஆரம்பமாக 1 இராஜாக்கள் 3ம் அதிகாரத்தைப் பார்க்கலாம். இந்த அதிகாரத்தின் முதல் பகுதியில் தேவன் சாலொமோனின் சொப்பனத்தில் தோன்றி "நீ விரும்புகிறதைக் கேள்" என்று கூறுகிறார். "உனக்கு என்ன வேண்டும்? நான் அதை உனக்குத் தருவேன்" என்று திடீரென ஆண்டவர் உங்களிடம் கூறுவாராயின், உங்களுக்கு நிச்சயம் அது கடினமான சூழ்நிலையாக இருக்கும். சாலொமோன் ஐசுவரியத்தையோ, மகிமையையோ, சத்துருக்களின் உயிரையோ கேட்காமல் ஞானத்தைக் கேட்டார் என்பதை நாம் அறிவோம். "ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தைத் தந்தருளும்" என்று கேட்கிறார். இவருடைய விருப்பத்தைப் பார்த்து தேவன் மிகவும் பிரியமாயிருந்தார். "நீ இதனைக் கேட்டதால் நீ கேட்காதவற்றையும் உனக்குத் தருவேன்" என்று தேவன் கூறினார்.

இந்தக் காரியம் நடந்தவுடன் ஒரே வீட்டில் வசித்து வந்த ஒழுக்கக் கேடான இரு பெண்களின் வழக்கு சாலொமோனிடத்தில் வருகிறது. ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒரு குழந்தை பிறக்கிறது, அந்தக் குழந்தையைப் படுக்கையில் தங்களுடன் படுக்க வைத்திருக்கின்றனர். நடு இரவில் தூக்கத்தில் அவ்விருவரில் ஒரு பெண் தன்னுடைய

குழந்தைமேல் புரண்டு படுத்ததால் அக் குழந்தை உயிரிழக்கிறது. அடுத்த நாள் காலையில் இரு தாய்மாரும் உயிருடன் உள்ள குழந்தையுடன் வந்து சாலொமோனிடத்தில் அக்குழந்தை தனக்குரியது என்று வாதிடுகின்றனர். உயிருடன் உள்ள குழந்தையின் உண்மையான தாய் அக்குழந்தை தனது என்று கூறுகிறாள். இறந்துபோன குழந்தையின் தாயும் அக்குழந்தை தன்னுடையதே என்று கூறுகிறாள். எனவே இந்த வழக்கு சாலொமோனுக்கு முன்பாக வருகிறது. இப்பொழுது சாலொமோன், "ஒரு காரியம் செய்கிறேன், ஒரு வாளை என்னிடம் கொண்டு வாருங்கள்;" என்கிறார். வாள் கொண்டுவரப்பட்டதும் "இந்தக் குழந்தையை இரண்டு துண்டாக வெட்டப்போகிறேன்; ஒவ்வொருவரும் ஒரு துண்டை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறுகிறார். குழந்தைக்குச் சொந்தமில்லாத பெண் உடனே "ஆம் இதுதான் சரி, குழந்தையை வெட்டி என்னுடைய பாதியை எனக்குக் கொடுங்கள்" என்று கூறுகிறாள். ஆனால் உண்மையான தாயோ, தனது குழந்தை சாவதை விரும்பாமல் "இல்லை, இந்தக் குழந்தையை அவளிடமே கொடுத்துவிடுங்கள், இக்குழந்தை வாழட்டும்", என்று கூறுகிறாள். உடனே சாலொமோன் "இவள்தான் இக்குழந்தையின் உண்மையான தாய்!" என்று கூறுகிறார். இதன் மூலம் சாலொமோனின் ஞானம் இஸ்ரவேல் தேசம் எங்கும் பரவுகிறது.

இது மிகவும் சாதாரணமானது. உண்மையான தாய் தனது குழந்தை சாவதைவிட மற்ற பெண்ணிடம் கொடுக்கப்படுவதையே விரும்புவாள். இதுதான் உண்மையான சோதனை. கிறிஸ்தவ ஊழியங்களிலும் இயக்கங்களிலும் ஒரு மனிதன் தன்னுடைய உடமைகளைப் பயன்படுத்த சுயமாய் விரும்புகிறான். ஆனால் மற்றொருவர் அதனை எதிர்க்கிறார்.

அதைத் தன்னுடையது என உரிமை கொண்டாடுகிறார். இதனால் விவாதங்களும் சண்டைகளும் ஏற்படுகின்றன. என்னுடைய முப்பது வருட அனுபவத்தில் பலவிதமான மனிதர்களையும் பலவிதமான நிகழ்ச்சிகளையும் நான் கூறமுடியும். உண்மையான சோதனை வரும்போது அது உங்களுடைய குழந்தையாக இருக்கும்போது, சாவதைவிட மற்றப்பெண் அந்தக் குழந்தையை வைத்துக் கொள்ளட்டும் என்று விட்டுக் கொடுக்க முடியுமா?

உண்மையான சோதனை நமக்கு வரும்போது "என்னுடைய ஊழியத்தையும் வெற்றியையும் எனது என்று உரிமை கொண்டாட விரும்புகிறேனா? என்னுடைய புகழை நிலை நாட்ட விரும்புகிறேனா? ஜெபித்து நான் பெற்றவை, உழைத்துப் பெற்றவை அனைத்தையும் மற்றவர்கள் அனுபவிக்கட்டும் என்று விட்டுக்கொடுக்க நான் தயாரா?" இது, நீங்கள் உங்கள் குழந்தையை விட உங்களை நேசிக்கிறீர்களா அல்லது உங்களைவிட குழந்தையை நேசிக்கிறீர்களா என்பதைப் பொறுத்ததாகும்.

அடுத்தமுறை இப்படிப்பட்ட சூழ்நிலையை நீங்கள் சந்திக்கும்போது உங்களுடைய அன்பின் அளவை நீங்கள் அளந்துபார்க்க முடியும். நீங்கள் விட்டுக்கொடுக்க முடியும் என்றால் உண்மையிலேயே அதை நேசிக்கிறீர்கள். ஆனால் அதில் பாதி வேண்டுமென்று கூறுவீர்களென்றால் நீங்கள் அதனை நேசிக்கவில்லை என்றுதான் அர்த்தம்.

ஆதியாகமம் 13ம் அதிகாரத்தில் ஆபிரகாமைக் குறித்த சம்பவத்தைக் கூறவிரும்புகிறேன். கல்தேயரின் பட்டணமாகிய ஊர் என்னும் ஊரைவிட்டு தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஆபிரகாம் புறப்படுகிறார். ஆனால் அது

முழுமையான கீழ்ப்படிதலல்ல. இதை ஆதியாகமம் 12ம் அதிகாரத்திலிருந்தே காணலாம். "நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப்போ" என்று தேவன் கூறுகிறார். ஆனால் ஆபிரகாம் தேவனுக்கு முழுமையாகக் கீழ்ப்படியவில்லை. ஏனெனில் அவர் தனது தகப்பனையும் தன் தகப்பனுடைய சகோதரன் மகனையும் உடன் அழைத்துச் செல்கிறார். இவர்களில் ஒருவரையும் கூட்டிக்கொண்டு போக தேவன் கூறவில்லை. தன் தகப்பன் அவரோடு இருக்கும் வரை ஆபிரகாம் பாதி அளவுதான் செல்ல முடிந்தது. ஊருக்கும் கானானுக்கும் பாதி தூரத்திலுள்ள ஆரான் வரை மட்டுமே செல்ல முடிந்தது. தனது தகப்பன் இறந்துபோகும் வரை இதற்குமேல் அவரால் செல்ல முடியவில்லை.

இதுபோல் தான் நம்மில் அநேகர் இருக்கிறோம். "எல்லாவற்றையும் விட்டு வெளியே வா, உனக்காக நான் வைத்திருக்கிற சுதந்திரங்களை உனக்கு நான் காட்டுவேன்" என்று தேவன் கூறுகிறார். ஆனால் நாம் நம்முடன் நம்முடைய "தந்தையை" அழைத்துச் செல்ல விரும்புகிறோம். "தந்தை" என்பது நல்ல ஒரு பதவியாகவோ, நல்ல சம்பளம் கிடைக்கும் வேலையாகவோ, ஒரு சபைப்பிரிவுடன் உள்ள தொடர்போ, ஓர் ஓய்வு ஊதியத்திட்டமாகவோ அல்லது இதைப் போலொத்த வேறு ஏதாவதொன்றாகவோ இருக்கலாம். எப்படியிருந்தாலும் உங்கள் தகப்பனாரைக் கூட்டிக்கொண்டு செல்லும்வரை நீங்கள் பாதி தூரம் மட்டுமே செல்ல முடியும் என்று தேவன் கூறுகிறார். இதுதான் ஆபிரகாமின் வாழ்க்கையிலும் நடந்தது. தன்னுடன் தன் தகப்பனாரைக் கூட்டிக்கொண்டு செல்லும் வரை ஆபிரகாமால் கானானுக்குள் செல்லமுடியவில்லை. அப்போஸ்தலர் 7ம் அதிகாரத்தில் ஸ்தேவான் யூத ஆலோசனை

சங்கத்தாரைப் பார்த்துப் பேசுகையில் இதனைக் குறிப்பிடுகிறார்: "அவனுடைய தகப்பன் மரித்தபின்பு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிலே குடியேறினான்."

இருந்தபோதிலும் ஆபிரகாமுக்கு அவருடைய சகோதரன் மகனாகிய லோத்துவுடன் ஒரு பிரச்சனை இருந்தது. லோத்து அங்கிருக்க வேண்டிய அவசியமில்லை. இருவரும் அதிகமான அளவு பொருட்களையும் கால் நடைகளையும் வாங்கினார்கள். அதனால் அவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து இருக்க முடியவில்லை. அவர்களுடைய மேய்ப்பருக்குள் அடிக்கடி சண்டை ஏற்பட்டது. அதற்குப் பிறகு என்ன நடந்தது என்பதை ஆதியாகமம் 13ம் அதிகாரம் 7ம் வசனம் முதல் வாசிக்கிறோம்:

> *ஆபிராமுடைய மந்தைமேய்ப்பருக்கும் லோத்துடைய மந்தைமேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று. அக்காலத்திலே கானானியரும் பெரிசியரும் அத்தேசத்தில் குடியிருந்தார்கள்.*
>
> *ஆபிராம் லோத்தை நோக்கி: எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர்.*
>
> *இந்தத் தேசமெல்லாம் உனக்குமுன் இருக்கிறது அல்லவா? நீ என்னைவிட்டுப் பிரிந்து போகலாம்; நீ இடது புறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலது புறம் போனால், நான் இடது புறம் போகிறேன் என்றான்.*

ஆபிரகாம் வயதில் பெரியவர், அவரை தேவன் அழைத்திருந்தார். அவருக்குத்தான் இந்த சொத்துக்கள் எல்லாம் சொந்தம். ஆனால் அவர் லோத்தை நோக்கி "நீ உனக்கு வேண்டியதைத் தெரிந்துகொள். நீ எதைத் தெரிந்து

கொள்ளுகிறாயோ அதை நீ வைத்துக் கொள்ளலாம்" என்று கூறுகிறார்.

அப்பொழுது லோத்து தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்து: யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக்கண்டான். கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் அழிக்கும்முன்னே, சோவாருக்குப் போம் வழிமட்டும் அது கர்த்தருடைய தோட்டத்தைப்போலவும் எகிப்து தேசத்தைப்போலவும் இருந்தது.

அப்பொழுது லோத்து யோர்தானுக்கு அருகான சமபூமி முழுவதையும் தெரிந்துகொண்டு, கிழக்கே பிரயாணப்பட்டுப்போனான்; இப்படி அவர்கள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்தார்கள்.

ஆபிராம் கானான் தேசத்தில் குடியிருந்தான்; லோத்து அந்த யோர்தானுக்கு அருகான சமபூமியிலுள்ள பட்டணங்களில் வாசம்பண்ணி, சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான்.

சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாய் இருந்தார்கள்.

லோத்து பிரிந்து சென்றபின்பு நடந்தவற்றை இவ்வாறு நாம் காணலாம்:

லோத்து ஆபிராமைவிட்டுப் பிரிந்த பின்பு, கர்த்தர் ஆபிராமை நோக்கி: உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப்பார்.

நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுப்பேன்.

அது தான் அவருடைய சுதந்திரம், அவர் முழுவதுமாய் விட்டுக் கொடுக்கும் வரை தேவன் அதை அவருக்குக் காட்டவில்லை. இப்படித்தான் தேவன் நம்மிடத்திலும் கிரியை செய்வார். நாம் சில காரியங்களை இறுகப் பிடித்துக் கொண்டு "அது என்னுடையது, அதை என்னிடமிருந்து பறிக்க விடமாட்டேன்" என்று கூறிக்கொண்டிருக்கும் வரை தேவன் உங்களுக்கு என்ன வைத்திருக்கிறார் என்பதை நீங்கள் பார்க்க முடியாது. விட்டுக்கொடுக்கும் ஆவி மாத்திரமே சுதந்திரத்தைப் பெற்றுத்தருமேயொழிய கவர்ந்துகொள்ள வேண்டுமென்ற ஆவியோ, பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற ஆவியோ இதனை நமக்குக் கொடுக்காது. "இது என்னுடையது இதனை நீ பெற முடியாது, தேவன் இதனை எனக்குக் கொடுத்தார்," என்று நீங்கள் கூறும்வரை தேவன் உங்களுக்கு வைத்திருப்பதை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியாது. நீங்கள் விட்டுக் கொடுக்க வேண்டும்.

எனது மனைவி லிடியாவும் நானும் திருமணம் செய்து கொள்வதற்கு முன்பாக இரண்டாம் உலகப் போரின்போது பாலஸ்தீனத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றினை எனக்கு ஞாபகப்படுத்தினாள். எருசலேமுக்கு வடக்கே பத்து மைல் தொலைவிலுள்ள ராமல்லா என்ற பட்டணத்தில் அவள் வசித்து வந்தாள். அவள் சிறு பிள்ளைகள் மத்தியில் ஊழியம் செய்து வந்தாலும் அந்தப் பட்டணத்திலுள்ள அரேபிய பெண்கள் மத்தியிலும் எழுப்புதல் உண்டாயிற்று. இது தெய்வீகச் செயலாக இருந்தாலும் தேவன் என் மனைவியைக் கருவியாகப் பயன்படுத்தினார். அந்த அரேபிய பெண்கள் அங்கு வந்த

பின் மனமாறி இரட்சிக்கப்பட்டு அசுத்த ஆவியிலிருந்து விடுதலை பெற்று பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் பெற்றனர். தேவனுடைய நாம மகிமைக்காக அந்தப் பணி வளர்ந்து பெருகிற்று.

ஆனால் எருசலேமிலிருந்த ஒரு மிஷனெரி இந்தப் பணி தன்னுடையது என்று உரிமை கொண்டாடினார். ஒரு அரேபிய ஊழியரை அனுப்பி "இவ்வூழியம் எனக்குரியது. நீங்கள் வரும் முன்பே எங்களுடைய ஊழியர் இந்தப் பட்டணத்தில் பணிபுரிந்தார்" என்று சொல்லச் சொன்னார். உண்மையில் அந்த ஊழியரால் எந்த ஒரு பயனுள்ள ஊழியத்தையும் செய்ய முடியவில்லை. ஆனால் என்னுடைய மனைவி அந்தப் பெண்களை நன்கு புரிந்து கொண்டு அவர்களை நேசித்தாள். அவர்களும் இவளை நேசித்தனர். இதைக் குறித்து நான் சாட்சி கூற முடியும். இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின் நானும் என் மனைவியும் அந்தப் பட்டணத்திற்குச் சென்றிருந்தோம். அங்கு ஊழியம் செய்தது என் மனைவிதான் என்பதை அறிந்ததும் அந்தப் பெண்கள் அனைவரும் தெருவுக்கு ஓடிவந்து என் மனைவியைக் கட்டி அணைத்துக் கொண்டனர். இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்பும் அவர்கள் என் மனைவியை இதற்காக மறக்கவில்லை.

தனிப்பட்ட முறையில் எனது மனைவி இத்தகைய கோரிக்கையை வைத்து ஓர் ஆணை எதிர்த்து நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அவள் ஆபிரகாம் சொன்னதுபோல "நீ தெரிந்து கொள்ளலாம். நீ இடதுபுறம் போனால் நான் வலது புறம் போகிறேன்" என்றார். அந்த மிஷனெரி "சரிதான் இது எங்களுடைய ஊழியம், நாங்கள் இதனை எடுத்துக் கொள்ளுகிறோம்" என்றார். எனவே எனது மனைவி இந்த அரேபிய பெண்களைப் பார்த்து இனிமேல் நாம் கூட்டங்கள்

நடத்தப்போவதில்லை. இந்தக் கூட்டங்கள் குறிப்பிட்ட ஓர் இடத்தில் நடைபெறும். நீங்கள் அங்கு சென்று அந்த ஊழியத்தைத் தாங்குங்கள் என்றாள். ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு அந்த ஊழியம் நலிவடைந்து முற்றிலும் நின்றுபோனது. ஏனெனில் இந்த ஊழியத்தை எடுத்து நடத்தியவருக்கு உண்மையான தேவ அழைப்பில்லாதிருந்ததே காரணம். இது அவருடைய ஊழியமல்ல. ஆனால் என் மனைவி அவருக்கு விட்டுக் கொடுத்ததன் மூலம் தனிப்பட்ட முறையில் வெற்றி பெற்றாள்.

இடைப்பட்ட காலத்தில் நடந்தது இதுதான். சில மாதங்களுக்குள், மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரிந்துவந்த பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க இராணுவத்தினர் என் மனைவி நடத்திவந்த பிள்ளைகளுக்கான இல்லத்திற்கு வர ஆரம்பித்தனர். அங்கே தேவனையும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும் நாடி வந்தனர். அடுத்த மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க இராணுவத்தினர் அந்த சிறுவர் இல்லத்திற்கு வந்து கர்த்தரை அறிந்துகொண்டது மட்டுமன்றி பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும் பெற்றுக் கொண்டனர்.

நானும் அந்த சமயத்தில் பிரிட்டிஷ் இராணுவத்தில் மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரிந்து வந்தேன். மத்திய ஆப்பிரிக்காவிலுள்ள சூடானில் நான் இருந்தபோது எனது சக போர்வீரன் ஒருவன் என்னைப் பார்த்து "நீங்கள் உண்மையான ஆசீர்வாதம் பெற வேண்டுமென்றால் எருசலேம் பட்டணத்திற்கு வடக்கே பத்துமைல் தொலைவிலுள்ள அந்தச் சிறிய பிள்ளைகள் இல்லத்திற்கு செல்லுங்கள்" என்று கூறினார். நான் இரண்டுவாரம் விடுப்பு எடுத்துக் கொண்டு நைல் நதியில் பயணம் செய்து கெய்ரோ பட்டணம் வந்து அங்கிருந்து

எருசலேம் வந்து சேர்ந்தேன். கடைசியாக அந்த சிறிய பிள்ளைகளின் இல்லத்திற்கு வந்தேன். அங்கு நான் பெற்ற ஆசீர்வாதம் நான் எதிர்பார்த்ததற்கும் மேலானது. அதற்குக் காரணம் எனது மனைவி.

பொதுவாக அரேபிய பாரம்பரியப்படி பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க இராணுவத்தினர் இருக்கும் இடங்களில் அரேபிய பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை. ஒருவேளை அரேபிய பெண்களுக்கு மட்டும் ஊழியம் செய்திருந்தால் இந்த இராணுவ வீரர்கள் அங்கு வந்திருக்க முடியாது. நாம் விட்டுக்கொடுக்கும்போது உயர்த்தப்படுகிறோம். இந்த இராணுவ வீரரில் பலரும், நானும் கூட இன்று உலகின் பல பாகங்களில் முழுநேர மிஷனெரிகளாகவும் போதகர்களாகவும் பணிபுரிந்து வருகிறோம். இவர்களில் சிலர் அமெரிக்காவிலும், பிரிட்டனிலும், தென் ஆப்பிரிக்காவிலும் ஊழியம் செய்து வருகின்றனர்.

படிப்பினை இதுதான்: விட்டுக்கொடுக்க மனம் வேண்டும். அது ஒரு வேளை தவறானதாகவும், முறையற்றதாகவும், நியாயமற்றதாகவும் காணப்படலாம்! ஆனால் தேவன் இதை ஏற்படுத்தியுள்ளார். அவர் அனைத்தையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார். இதுதான் விசுவாசம்!

5
“நீ இப்பொழுது உன் மகனை அழைத்துக் கொண்டு போ...”

நாம் திரும்பவும் ஆபிரகாமைப்பற்றிப் பார்க்கலாம். ரோமர் 4ஆம் அதிகாரம் ஆபிரகாமினுடைய விசுவாசத்தின் படிகளைக் குறித்துக் கூறுவதை நாம் காணலாம். எனக்கு ஒரு காரியம் நன்றாக விளங்குகிறது. அது என்னவென்றால் விசுவாசம் என்பது தொடந்து செயலாற்றிக்கொண்டே இருக்கும். ஆலயத்தில் உட்கார்ந்து கொண்டு நான் அதைப் பெற்றுக் கொண்டேன் என்று கூறுவதல்ல. விசுவாசம் என்பது நடைபோடுவது. இது ஒவ்வொரு அடியாக வைத்து முன்னேறிச் செல்வதாகும். ஆபிரகாம் விசுவாசிகளுக்கெல்லாம் தகப்பன். அவருடைய விசுவாசத்தின் படிகளைக் கவனமாகப் பார்த்து நாமும் நடந்தால் நமக்கும் அவர் தகப்பனாக இருப்பார்.

ஆபிரகாமுடைய விசுவாசம் முன்னேறிக் கொண்டே வந்தது. ஆதியாகமம் 12ம் அதிகாரத்திலிருந்து 22ம் அதிகாரம் வரைக்கும் வாசித்துக்கொண்டே செல்லும்போது ஆபிரகாமுடைய விசுவாசத்தின் வளர்ச்சியை நாம் காணலாம். 22ம் அதிகாரத்தில் அவருடைய விசுவாசம் உச்சக் கட்டத்தை அடைகிறது. 22ம் அதிகாரத்தில் அவர் செய்த காரியத்தை 12ம் அதிகாரத்தில் அவரால் செய்திருக்க முடியாது. அவரது

விசுவாசம் இந்த உச்சக் கட்டத்தை அடைவதற்குக் காரணம் ஒவ்வொரு முறையும் தேவன் அடியெடுத்து வை என்று கூறுகிறார்; ஆபிரகாம் அடியெடுத்து வைக்கிறார். ஒவ்வொரு முறையும் தேவன் ஒரு சவாலை அவருக்குக் கொடுக்கிறார். அவரும் அதை ஏற்றுக் கொள்ளுகிறார். எனவே அவரது விசுவாசம் முன்னேற்றப் பாதையில் கட்டப்படுகிறது. யாக்கோபு நிருபத்தில் கிரியைகளினாலே அவரது விசுவாசம் பூரணப்பட்டது என்று வாசிக்கிறோம். விசுவாசம் ஒரு பரிசாகக் கொடுக்கப்பட்டாலும், கீழ்ப்படிதலின் படிகளில் நாம் நடந்து செல்லும்போது தான் அது பூரணப்படுகிறது.

ஆனாலும் ஆபிரகாம் நம்மைப்போல ஒரு பாடுள்ள மனுஷன். அவரும் கூட தவறுகள் செய்தார். அவருடைய சுதந்திரத்தை அனுபவிக்க அவருக்கென ஒரு மகன் பிறப்பான் என தேவன் வாக்குப்பண்ணினார். ஆனால் அந்த வாக்குத்தத்தம் தாமதமானது. பன்னிரண்டு வருடமாகியும் அவருக்கு மகன் பிறக்கவில்லை. சாராளுக்கு 78 வயதானதினால் இச்சூழ்நிலை நம்பிக்கையற்றதாக அவளுக்குத் தோன்றியது. கடைசியாக நமக்குப் பிள்ளை வேண்டுமென்றால் நாம் ஒரு காரியத்தைச் செய்தாக வேண்டும் என்று கூறினாள். தேவனுக்கு ஏற்ற காரியங்களை நாம் செயல்படுத்துகையில் நாம் கூறும் மிக மோசமான வார்த்தை நாம் வேறு ஒரு காரியத்தைச் செய்வது நல்லது என்பதுதான்.

ஆபிரகாம் தனது மனைவியின் ஆலோசனைப்படி செய்து (அது தவறானது) அவளுடைய வேலைக்காரியாகிய ஆகார் மூலம் ஒரு மகனைப் பெறுகிறார். இதில் எந்தத் தவறும் இல்லை. அந்தக் காலத்து வழக்கத்தின்படி அது சரியானது, நீதியானது, ஒழுங்கானது. ஆனால் அது தேவனுடைய

திட்டமல்ல. அந்தக் குழந்தையின் பெயர் இஸ்மவேல். அக்குழந்தையின் சந்ததியினர் மத்திய கிழக்கு நாடுகளில் தற்போது அராபியர்களாக வாழ்கின்றனர்.

பின்னர் சாராளுக்கு தேவன் வாக்குப்பண்ணின குழந்தையாகிய ஈசாக்கு பிறக்கிறான். இதற்குப் பின்னர் நாலாயிரம் ஆண்டுகளாக இவ்விரு குழந்தைகளாகிய- இஸ்மவேல் மற்றும் ஈசாக்கின் சந்ததியாருக்கிடையே எப்பொழுதும் தொடர்ந்து பிரச்சனை இருந்து கொண்டே இருக்கிறது. இந்தப் பிரச்சனை இன்று உச்சகட்டத்தில் உள்ளது. உலக வரலாற்றில், ஈசாக்கின் சந்ததியார் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட நாட்டிற்குள் பிரவேசிக்க முடியாமல் இந்த இஸ்மவேல் சந்ததியார் பெரிய தடுப்புச் சுவராக இருந்தனர். சரித்திரம் இதைவிடச் சிறந்த பாடத்தைக் கற்பிக்க முடியாது: *தேவனால் அளிக்கப்பட்ட சுதந்திரத்தை உலகப்பிரகாரமான வழிகளில் அபகரிக்க முயல்வது அழிவுக்கு நேராகக் கொண்டு செல்லும்.*

மற்றொரு ஊழியக்காரர் இவ்வாறு கூறினார்: "மனிதனின் அவசர சூழலுக்கேற்ற குழந்தை இஸ்மவேல்." நீங்கள் ஒரு காரியத்தைச் செய்யத் தீர்மானித்தால், தேவன் உங்களுக்கு உதவி செய்ய ஏதுவாகக் காரியம் செய்யுங்கள். ஒரு முறை நான் ஒரு காரியம் செய்யத் தீர்மானித்தேன். எனது திட்டத்தின்படி சிறிது தூரம் சென்றேன். என்னோடு ஊழியம் செய்த ஓர் ஊழியக்காரரோடு இது குறித்துப் பேசிக் கொண்டிருக்கும்போது நான் இவ்வாறு கூறினேன்: "நான் உண்மையில் இந்தக் காரியத்தைச் செய்ய இயலுமா என எனக்குத் தெரியவில்லை".

"ஏன் உங்களால் முடியாது?" என்று அவர் கேட்டார்.

"அது ஒரு வேளை ஓர் இஸ்மவேலாக இருக்குமோ என்று எனக்குப் பயமாக உள்ளது" என்று நான் கூறினேன். நான் கூறிய கூற்று எனது நண்பருக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

சில நாட்களுக்குப் பின்பு ஒருமுறை நாங்கள் இருவரும் ஒன்றாக இருந்தபோது "அந்தக் காரியம் செய்வதிலிருந்து உங்கள் மனதை நீங்கள் மாற்றியதற்குக் காரணம் என்ன என்று கூற முடியுமா?" என்று அவர் என்னிடம் கேட்டார்.

"கர்த்தருக்குப் பயப்படும் பயம் தான் அதற்குக் காரணம்" என்று நான் கூறினேன். நான் கூறிய பதில் அவருக்கு திருப்தி அளித்ததை நான் உணர்ந்தேன். நான் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தோடு வாழ முயற்சித்தேன் என்பதை நான் உண்மையாய் கூற விரும்புகிறேன். தேவன் வருந்தும் காரியங்களையோ தேவனுடைய வழியில் குறுக்கிடும் எந்த செயல்களையோ நான் செய்ய விரும்பவில்லை. நான் தேவனோடு அன்பாக இணைந்து செல்ல விரும்புகிறேன். எனவே நான் இஸ்மவேலை ஓரங்கட்டிவிட்டேன்.

என்னைப் பொறுத்தவரை அடிப்படைப் பாடம் இதுதான். நாம் சரியென்று நினைப்பதோ, நல்லவைகள் என்று நினைத்துச் செயல்படுவதோ மனிதனின் அழிவுக்கு அடிகோலுகின்றன. தேவன் இவற்றினின்று நம்மை விடுவித்துக் காப்பாராக. என்னையும் உங்களையும் இத்தகைய அழிவினின்று விடுவித்துக் காப்பாராக. இஸ்மவேல் போன்ற காரியங்களைப் பெற்றெடுத்து பின்னால் வருத்தப்படும் செயல்களுக்கு நம்மை தேவன் விலக்கிக் காப்பாராக.

தேவன் நமக்கு அனுமதிக்கும் பெரிய சோதனை எது? அது தான் காத்திருப்பது ஆகும். தேவன் உங்களைப் பார்த்து இந்த மலையின்மேல் ஏறுங்கள் என்று கூறினால் உடனடியாக

ஏற ஆரம்பித்துவிடுவீர்கள். ஆனால் தேவன் உங்களை அந்த மலையின் அடிவாரத்தில் உட்கார்ந்து காத்திருக்கச் சொல்வாரென்றால் உங்களால் அதைச் செய்ய முடிவதில்லை.

வேதத்தில் மிகவும் தேர்ந்த ஓர் ஊழியக்காரன் மோசேயாகும். எப்படி அவர் அந்த முதிர்ச்சியைப் பெற்றார்? நாற்பது ஆண்டுகள் வனாந்தரத்தில் இருந்தார். இது அவருக்குக் கற்றுத்தந்தது என்ன? மிகவும் எளிமையான மோசே தன்னுடைய உரிமைகளைக் கோரவில்லை. அவர் பின்வாங்கி வேறு யாராவது இந்தக் காரியத்தைச் செய்யட்டும் என்று கூறுகிறார். வேறு யாராவது இந்தக் குழந்தையை வைத்துக் கொள்ளட்டும் என்று நான் கூறும்போது நான் பாதுகாப்பாக இருப்பதாக உணருகிறேன். ஆனால் நான் உணர்ச்சிவசப்படும்போது அழிவை நோக்கிப் போகிறேன்.

நாம் மீண்டும் ஆதியாகமம் 22ம் அதிகாரத்திற்குப் போவோம். 2ம் வசனத்தில் தேவன் ஆபிரகாமை நோக்கி:

> *உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார்.*

இதற்கு ஆபிரகாம் என்ன செய்தார்? அடுத்த வசனம் இப்படிக் கூறுகிறது: ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து கழுதையின் மேல் சேணங்கட்டி. . .

இதனைப் பார்க்கும் போது ஆபிரகாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தது மட்டுமல்ல, உடனடியாகவும் முழுமையாகவும்

கீழ்ப்படிந்தார் என்பது புலனாகிறது. தேவன் ஒரு காரியத்தைச் செய்யும்படிச் சொன்னபோது அடுத்த நாள் அதிகாலையில் எழுந்து அதைச் செய்கிறார். ஒருவேளை தேவன் மனம் மாறக் கூடும் என்று அடுத்த நாள் மதியம் வரைக் காத்திருக்கவில்லை. அடுத்த நாள் புறப்பட்டு ஈசாக்கைக் கூட்டிக்கொண்டு மூன்று நாள் பிரயாணமாக மோரியா மலைக்குப் போகிறார்.

இந்த நிகழ்ச்சி உங்களுக்குத் தெரியும்: மலை உச்சிக்குச் சென்றபின் ஈசாக்கு ஆபிரகாமை நோக்கி, இதோ நெருப்பும் கட்டையும் இருக்கிறது, தகன பலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே? என்று கேட்கிறான். அதற்கு ஆபிரகாம் என் மகனே தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக் கொள்ளுவார் என்று கூறுகிறார். எபிரெயர் ஆக்கியோன் 11ம் அதிகாரத்தில் விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்டபோது மரித்தோரிலிருந்து தேவன் எழுப்ப வல்லவராயிருக்கிறாரென்று எண்ணி தனக்கு ஒரே பேறானவனையே பலியாக ஒப்புக் கொடுத்தார் என்று கூறுகிறார். ஆதியாகமம் 22ம் அதிகாரத்தைக் கவனமாக வாசித்தீர்களென்றால் எபிரெய ஆக்கியோன் ஏன் அப்படிக் கூறினார் எனத் தெரிந்து கொள்ளலாம். ஆபிரகாமோடு வந்த வேலைக்காரரைப் பார்த்து அவர் நானும் பிள்ளையாண்டானும் அவ்விடமட்டும் போய் தொழுதுகொண்டு உங்களிடத்துக்குத் திரும்பி விடுவோம் என்று கூறுவதிலிருந்து இதற்கான காரணத்தைத் தெரிந்து கொள்ளலாம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அந்தக் கத்தியால் அவரது மகன் கொல்லப்பட்டிருந்தாலும் அவன் மீண்டும் உயிர் பெறுவான் என்று ஆபிரகாம் விசுவாசித்திருந்தார். தேவன் அவருக்கு வாக்குப் பண்ணின ஆசீர்வாதத்திற்குக் காரணமான

அற்புதத்தின் பிள்ளையைக் கொல்வதற்குத் துணிந்த நிலைக்கு வந்தார். எப்படியும் தன் மகனை தேவன் உயிரோடு எழும்பப்பண்ணுவார் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது.

ஆபிரகாம் கத்தியை எடுத்து தன் மகனை வெட்டுவதற்கு ஓங்கிய போது தேவனுடைய தூதனானவர் வானத்திலிருந்து கூப்பிட்டுத் தடுத்தார். பலியிடுவதற்கு வேறு ஓர் ஆட்டை தேவன் வைத்திருந்தார் என்று ஆபிரகாம் கண்டுகொண்டார். புதரில் தனது கொம்பு சிக்கிக் கொண்டிருந்த ஒரு ஆட்டுக்குட்டியைக் கண்டார். தனது மகனுக்குப் பதிலாக அதனை ஆண்டவருக்குப் பலியிட்டார். பிறகு இரண்டாவது முறையாக தேவன் பேசினார்:

கர்த்தருடைய தூதனானவர் இரண்டாந்தரம் வானத்திலிருந்து ஆபிரகாமைக் கூப்பிட்டு:

நீ உன் புத்திரன் என்றும், உன் ஏக சுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால்;

நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் என்றும் கூறினார்.

(ஆதி. 22:15-17)

இது ஒரு விநோதமான காரியமாக இல்லையா? ஆபிரகாம் சாராள் இருவருக்கும் ஈசாக்கு தேவனால் கொடுக்கப்பட்ட வெகுமதியாகும். தேவன் அவர்களுக்கு நடுவே அற்புதமான

முறையில் இடைபடுவதிலிருந்து தங்கள் மகனை அவர்களால் தடுக்க முடியவில்லை. ஈசாக்கு அற்புதமான முறையில் பிறந்தவன். தேவன் அவர்களுக்குக் கொடுத்த பிள்ளையைப் பலியாகப் படைக்கும்படி தேவன் கேட்டார்.

ஆபிரகாமுடைய நிலையில் நான் இருந்திருந்தால் மோரியா மலைக்குச் செல்லும் அந்த மூன்று நாள் பயணத்தில் அவர் என்னவெல்லாம் நினைத்திருப்பார் என்று நான் யோசிக்க முற்பட்டேன்.

"தேவன் எதற்காக ஈசாக்கைக் கேட்டார்? உண்மையிலேயே தேவன் ஈசாக்கை நமக்குக் கொடுக்கவில்லையா? அவன் வாக்குத்தத்தத்தின் மகனில்லையா? தேவன் நமக்கு வாக்குப் பண்ணின சுதந்திரத்தை இவன் ஒருவன் மூலமாகத்தானே பெற்றுக்கொள்ள முடியும்? நாம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு வரவில்லையா? நாம் தேவனைப் பின்பற்றவில்லையா? நாம் அவருக்குக் கீழ்ப்படியவில்லையா? ஏன் தேவன் ஈசாக்கைத் தனக்கு வேண்டும் என்று கேட்டார்?"

ஆபிரகாம் இப்படி யோசித்தாரோ அல்லது சொன்னாரோ எனக்குத் தெரியாது. தேவன் தனக்குக் கட்டளையிட்டதை நிறைவேற்றும் இடம் வந்தவுடன், தேவன் அவரைப்பார்த்து "உன் இருதயத்தை நான் அறிவேன். இதுவரை இல்லாத முறையில் நான் உன்னை ஆசீர்வதிப்பேன், உனது வித்தை ஆசீர்வதிப்பேன்" என்றார். அவரது வித்து யார்? – ஈசாக்கு. நீங்கள் இந்தப் பாடத்தைப் புரிந்து கொண்டீர்களா? ஈசாக்கைப் பற்றிப் பிடித்திருப்பாரென்றால் ஈசாக்கு மட்டுமே இருந்திருப்பான். ஆனால் ஈசாக்கை விட்டுக் கொடுத்தபோதோ எண்ணிலடங்காத சந்ததியை ஈசாக்கு மூலம் ஆபிரகாம் பெற முடிந்தது.

தேவன் நமக்கு சிறந்த ஈவுகளைக் கொடுக்கும்போது இந்த மாதிரிதான் நடப்பதை நான் கண்டிருக்கிறேன். அது தேவனிடத்திலிருந்து வருகிறது, அது மிகவும் விலையேறப்பெற்றது, அது நிகரற்றது, அது அற்புதமானது, ஆனால் ஒரு நாள் தேவன் "அது எனக்கு வேண்டும். அதைத் திருப்பிக் கொடு. அதைக் கொன்றுவிடு. பலிபீடத்தின் மேல் வை" என்று கேட்பார். அந்த சமயத்தில் ஆபிரகாமின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நீங்கள் செல்வீர்களா? அல்லது தேவனுடைய ஆசீர்வாதத்தை இழந்துவிடப்போகிறீர்களா?

ஈசாக்கை பற்றிப்பிடித்துக் கொள்ளுகிற தவற்றை அநேக தேவனுடைய ஊழியக்காரர் செய்வதை நான் கண்ணுற்றிருக்கிறேன். அவர்களுக்கு மிஞ்சுவதெல்லாம் ஈசாக்கு மட்டுமே. இதுதான் எந்த ஒரு ஊழியக்காரரும் சந்திக்கும் மிகப்பெரிய சோதனையாகும். தனது ஊழியத்தை பலிபீடத்தின் மேல் வைக்க அந்த ஊழியக்காரர் வாஞ்சையோடு இருக்கிறாரா?

என்னுடைய வாழ்க்கையில் இந்த சோதனையை எப்படிச் சந்தித்தேன் என்பதை நான் திரும்பிப்பார்க்க விரும்புகிறேன். விடுதலையின் ஊழியத்தை நான் எவ்வாறு மிகுந்த வல்லமையோடு செய்தேனென்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நான் இதில் ஒரு சிறந்த ஊழியனாக கண்டறியப்பட்டேன் என்பதையும் உங்களில் அநேகர் அறிந்திருப்பீர்கள். பவுல் சொல்வதைப்போல நான் கூற விரும்புகிறேன். விடுதலையின் ஊழியத்திற்காய் நான் காட்டு மிருகங்களோடு போராடினேன். சரீரபிரகாரமாகவும் ஆவிக்குரிய பிரகாரமாகவும் ஜெபத்திலும் உபவாசத்திலும் நான் போராடினேன்.

தேசீய அளவில் போதிக்கும் ஊழியத்தில் பெயர் பெற்ற மூன்று பேரை தேவன் ஒரு சமயத்தில் என்னோடு இணைந்து ஊழியம் செய்ய அனுமதித்தார். ஒருவருக்கொருவர் இணைந்து ஊழியத்தில் ஒப்புக்கொடுத்து பணிபுரிய தேவன் எங்களுக்கு உதவி செய்தார். நம் எல்லாரிடத்திலும் தேவன் இவ்வாறான தெய்வீக சித்தம் கொண்டவராக உள்ளார். இது நாம் எதிர்பார்ப்பது போலவோ திட்டமிடுவதுபோலவோ நாம் புரிந்து கொண்டிருப்பதைப் போலவோ அல்ல. இது ஈசாக்கைப் போன்றது; ஆனால் இஸ்மவேலைப் போன்றதல்ல.

எனது விடுதலையின் ஊழியமானது எனது சகோதரருக்கு நான் வாக்குக் கொடுத்து இணைந்து ஊழியம் செய்வதில் அடங்கியுள்ளது என்பதை நான் சீக்கிரம் அறிந்துகொண்டேன். இதனை அவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டியதாயிருந்தது. நான் அதிகமாக ஆராய்ந்து பின் "சகோதரரே எனது இந்த விடுதலையின் ஊழியமானது வேதத்திற்கு முரண்பாடானதாகவோ, தவறானதாகவோ நீங்கள் இதனை விரும்பாததாகவோ இருக்குமானால் நான் இந்த ஊழியத்தைச் செய்யவில்லை என்று கூறினேன்" இதில் பயன் ஏதும் இருந்ததா? ஆம்.

இதன் மூலம் நான் கண்ட பலனைப் பார்த்து இன்று நான் தேவனைத் துதிக்கிறேன். முதலாவதாக எனது சகோதரர் விடுதலையின் ஊழியத்தை விட்டுவிடுமாறு ஒருபோதும் என்னிடம் கூறவில்லை. மாறாக அவர்கள் என்னைத் தாங்கினார்கள், என்னை பலப்படுத்தினார்கள். நான் வெளிப்படையாகத் தாக்கப்பட்டபோது என்னோடு நின்று எனக்கு ஆதரவு தந்தார்கள். இதன் மூலம் அவர்களின் புகழுக்குக் கூட பங்கமேற்பட்டது.

அமெரிக்க ஐக்கிய நாடுகள் முழுவதிலும் என்னுடைய சொந்த முயற்சியால் நான் அடைந்திருக்க முடியாத அளவுக்கு விடுதலையின் ஊழியத்தின் மூலம் சிறந்த முறையில் வெற்றிகள் கிட்டின. என்னுடைய ஈசாக்கை நான் தேவனுக்குக் கொடுக்கும்போது தேவன் இதை பன்மடங்காக்கித் தந்தார். இன்று இந்த ஊழியம் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள எல்லாப் பகுதிகளிலும் நடைபெற்று வருகின்றது. நான் இந்தப் பகுதிகளில் எங்கும் சென்று விடுதலையின் ஊழியத்தைச் செய்கிறேன். அப்பகுதிகளிலெல்லாம் வல்லமையாக இந்த ஊழியங்களைச் செய்யக்கூடிய தகுதி வாய்ந்த, தேவனுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்த ஊழியர்கள் உள்ளனர். உண்மையில் நான் இந்த ஊழியத்தைச் செய்ய வேண்டிய நிலை இல்லை. இந்த ஊழியத்தை விருப்பத்துடனும் திறமையாகவும் செய்யும் நூற்றுக்கணக்கான ஊழியர்களை தேவன் எழுப்பியுள்ளார். ஆனால் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற முறையிலல்ல. நான் திரும்பிப் பார்க்கும்போது, என்னுடைய ஈசாக்கை தேவனுக்கு ஒப்புக் கொடுக்க நான் விரும்பியதால், தேவன் இந்த ஊழியத்தைப் பெருகச் செய்தார் என்பதை உணர்ந்து ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். நான் எனது ஈசாக்கைப் பிடித்து வைத்துக் கொண்டிருந்திருந்தால் எனது ஊழியத்தில் தனித்து விடப்பட்டிருப்பேன். மேலும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலிருந்தும் தேவனுடைய நோக்கத்தின் அனைத்துச் செயல்பாடுகளினின்றும் தனித்து விடப்பட்டிருப்பேன்.

யோவான் 12:24ல் இயேசு கூறுவதைக் காண்போம்:

மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில்

விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்.

இதனை எப்போதும் இயேசுவின் மரணத்திற்கு நான் ஒப்பிட்டுக் கூறுவேன். உண்மையில் அது சரிதான். இயேசு கோதுமை மணி, அவர் தனது ஜீவனைக் கொடுக்க விரும்பினார். அவர் இந்த உலகத்தில் தோன்றி அடக்கம்பண்ணப்பட்டார். அவரது மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலமாய் அதிகமான பலன் கிடைத்தது. சில நாட்களுக்கு முன்பு இதைப் பற்றி நான் தியானிக்கையில், நான் என்னையும் என்னோடு சேர்ந்த மற்ற விசுவாசிகளையும் பற்றி யோசித்தேன். நமது கரத்தில் தேவன் நமக்குக் கொடுத்த தானியத்தை நாம் இறுக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறோம். உங்களுடைய தாலந்துகள், உங்கள் ஊழியங்கள், உங்கள் வரங்கள் இவைகளெல்லாம் மிகவும் விலையேறப்பெற்றவை. காரணம் இதனை தேவன் உங்களுக்குக் கொடுத்திருக்கிறார்.

நீங்கள் "இது என்னுடையது, நான் இதைச் செய்வேன், பிசாசுகளை எப்படித் துரத்துவது என்று எனக்குத் தெரியும், வியாதியஸ்தருக்காக ஜெபிக்கத் தெரியும், நான் ஜெபிக்கும்போது அவர்கள் தரையில் விழுவார்கள், எனக்கு இவைகள் குறித்து நல்ல ஞானம் உண்டு" என்று கூறுகிறீர்கள். அதனை உங்கள் கையில் பிடித்துக் கொண்டு "இது என்னுடையது" என்று சொல்வது நன்றாக உள்ளது. ஆனால் "இதை உன் கையிலேயே வைத்துக் கொண்டிருந்தால் அந்த ஒரு தானியம் மட்டுமே உன்னிடம் இருக்கும்" என்று தேவன் கூறுகிறார். உங்களுடைய பெயரை அதில் எழுதலாம் அல்லது உங்கள் முத்திரையை அதில் பதிக்கலாம். அது

உங்களுடையது என்று உரிமை கொண்டாடலாம். ஆனால் உங்களுக்கு அதற்குமேல் எதுவும் கிடைக்காது.

இதற்குப் பதிலாக நான் செய்யக் கூடியது என்ன? அதைக் கைவிடுவது; கடந்து போகச் செய்வது. "என் ஊழியம் போகட்டும், என் தாலந்துகள் நீங்கட்டும்" என்றா கூறுகிறீர்கள் எனலாம். ஆம் அப்படித்தான். அது கடந்து போகட்டும், அது பூமிக்கடியே சென்று புதைக்கப்படட்டும், அது காணப்படாமல் மறைந்து போகட்டும், அதற்குப்பின் அது உனக்குச் சொந்தமானதல்ல. ஆனால் நான் ஒன்று கூறுகிறேன்: கர்த்தர் அதற்குப் பொறுப்பேற்பார். அதற்கான பலன் கிடைக்க தேவன் உத்தரவாதம் அருளுவார்.

நாம் அனைவரும் இப்படிப்பட்ட சூழ்நிலைக்குள் வந்திருக்கிறோம். நம்மில் அநேகர் இதைப்போன்றதொரு தீர்மானத்தைச் செய்யும்படி தூண்டப்படுகிறோம். *என்னுடைய* பேர் பிரஸ்தாபத்தையே விரும்புகிறேனா? *என்னுடைய* புகழை நிலைநாட்ட விரும்புகிறேனா? *என்னுடைய* ஊழியத்தை, *என்னுடைய* பணித்தளத்தை, *என்னுடைய* முகாம்களை, *என்னுடைய* இளைஞர் மையங்களை, *என்னுடைய* விடுதலையின் ஊழிய மையங்களை உறுதிப்படுத்த முயலுகிறேனா? இது என்னுடையது என்ற காரியத்தில் நான் மிகவும் ஆர்வமுள்ளவனாக இருக்கிறேனா? அல்லது வேறு ஒரு தவறான நபர் என்னிடம் வந்து இந்தக் காரியங்கள் என்னுடையது என்று வாதிடுவாரானால், அந்தத் தவறான தாயிடம் அந்த சொந்தப் பிள்ளையின் தாய் கூறியது போல "சரி நீங்கள் இதனை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறுவீர்களா? நான் அந்த ஊழியத்தை நேசிக்கிறேனா? அல்லது என்னை நேசிக்கிறேனா? இவை தற்பரிசோதனைக்குப்பின் அளிக்கப்படவேண்டிய பதில்கள்.

தேவன் உங்களுக்கு எதையெல்லாம் கொடுத்திருக்கிறாரோ அதையெல்லாம் விட்டுக் கொடுக்கச் சொல்லி அவர் கேட்கும் சூழ்நிலை ஏற்படும் என்பதை நான் நம்புகிறேன். அதை விட்டு விடுங்கள்; அது விழட்டும்.

உங்களில் சிலர் இதனைச் செய்திருக்கிறீர்கள் என்று நான் அறிவேன்! கர்த்தருக்கு ஸ்தோத்திரம் அதனை விழ விட்டுவிட்டதற்காகச் சந்தோஷப்படுங்கள். நான் சில காரியங்கள் என்னைவிட்டுப்போக அனுமதித்ததற்காகச் சந்தோஷப்படுகிறேன். அவைகளை விட்டுவிடாமல் பிடித்துக் கொண்டிருந்தேனென்றால் அவைகள் என்னை கீழே விழத்தட்டியிருக்கும்.

6
கோதுமை மணி தனித்திருந்தால்...

அநேக ஊழியக்காரர்கள் மிகவும் வேலைப் பளுவுடன் இருக்கிறார்கள். எனக்கு வேலைப்பளு உள்ளது. ஆனால் மிகவும் அதிகமான வேலைப்பளுவுடன் நான் இல்லை. அதிக வேலைப்பளுவுடன் இருப்பது ஆவிக்குரிய நிலை இல்லையா? இது மக்களைக் கவரும். ஆனால் இது ஆவிக்குரிய காரியமல்ல. தேவன் உங்களைத் தனியாகப் படைத்தார். நீங்கள் எவ்வளவுதான் கடினமாக உழைத்தாலும் இருவருடைய பணியைத் திருப்திகரமாகச் செய்ய முடியாது.

"அவசரமான" காரியங்களைத் தவிர்த்து "முக்கியமான" காரியங்களைச் செய்வது குறித்து முடிவு செய்வது பற்றித் தனது சபை ஏட்டில் ஜேமி பக்கிங்ஹாம் என்பவர் எழுதிய ஒரு கட்டுரையை நான் படித்தேன். அநேக ஊழியக்காரர்கள் அவசரமான காரியங்களைக் குறித்து தான் சிரத்தை எடுத்துச் செய்கிறார்களே தவிர முக்கியமான காரியங்களைச் செய்வதில்லை. வேதத்தில் உள்ள ஜெபங்களில் மிகவும் முக்கியமான ஜெபம் 90ம் சங்கீதத்தில் உள்ளது: "நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்." "என்னுடைய நேரத்தைச் செலவிடுவது எவ்வாறு? என எனக்குப் போதியும்." இயேசுவைக் குறித்த காரியங்களில்

என்னை மிகவும் கவர்ந்தவற்றில் இதுவும் ஒன்று. அவர் எதற்கும் தாமதிக்கவில்லை. அதே போல எந்தக் காரியத்திற்கும் அவசரப்படவுமில்லை. அவர் எப்பொழுதும் மிகுந்த வேலைப்பளுவுடன் காணப்படவும் இல்லை. மற்றவர்களுக்கு, மிகவும் மும்முரமாக பணியில் ஈடுபடுபவனாக நான் காணப்படுவேன் என்றால் அது எனது "நான்" என்கிற அகம்பாவத்தினுடைய வெளிப்பாடேயாகும். மற்றவர்கள் தன்னை சாவகாசமாகச் சந்திக்குமளவிற்கு, தங்களை சாதாரணமானவர்களாகக் காட்டிக் கொள்ள அநேக மக்கள் விரும்புவதில்லை. என்னைப் பொறுத்தமட்டில் என் தலையீடு இன்றி காரியங்கள் நடக்குமாயின் அதுவே வெற்றி.

என் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியைப்பற்றிக் கூற விரும்புகிறேன். இது என் வாழ்வில் எப்போதும் எனக்கு நினைப்பூட்டுதலாக தொடர்ந்து செயலாற்ற உதவுகிறது. 1971ம் ஆண்டு வாஷிங்டனிலுள்ள சியாட்டில் பட்டணத்தில் ஊழியக்காரருக்கென்று நடத்தப்பட்ட ஒரு கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். டான் பாஷாம், பாப் மம்போர்டு, சார்லஸ் சிம்சன், லேரி கிரிஸ்டன்சன், ரால்ப் வில்க்கர்சன், டேவிட் டியூப்லெஸிஸ், டெனிஸ் பென்னட், ஏர்ன் பேக்ஸ்டர் முதலான நாடுதழுவிய பெயர்பெற்ற தேவனுடைய ஊழியக்காரர்கள் அதில் போதித்தனர். இக்கூட்டம் ஐந்து நாட்கள் நடைபெற்றன. ஒவ்வொரு நாள் காலையிலும் அநேக மாலைநேரக் கூட்டங்களிலும் நாங்கள் ஐக்கியப்பட்டிருந்தது ஒரு நல்ல அனுபவமாயிருந்தது. பிசாசுகளைப் பற்றி ஒன்றரை நாள் நாங்கள் பேசினோம். தண்ணீரில் ஞானஸ்நானம் பெறுவது குறித்து இரண்டு நாட்கள் பேசினோம். இந்த இரண்டு தடைகளையும் கடந்தபின்பு முன்னேற்றம் ஏற்பட்டது!

அமெரிக்காவின் வடமேற்குப் பகுதிக்கு அநேக ஊழியக்காரரை வரவழைப்பது அதிக செலவாகக் கூடியதாக இருந்ததால் அதற்கான தொகையை சரிக்கட்ட நிதிநிலைமை இல்லாமற்போயிற்று, எனவே இக்கூட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள் "நாங்கள் உங்களுக்கு எந்த உறுதிமொழியையும் கொடுக்கவில்லை. ஆனால் உங்களுடைய போக்குவரத்திற்கு நாங்கள் எப்படியாவது பணத்தை ஒழுங்கு செய்வோம்" என்று கூறினார்கள். இதற்காக சியாட்டில் பட்டணத்தில் உள்ள முக்கியமான ஐந்து பகுதிகளில் இரவு நேர பொதுக்கூட்டங்களை நடத்தினார்கள். ஒவ்வொரு இடத்திலும் இரண்டு அல்லது மூன்று ஊழியக்காரரை ஊழியத்தில் ஈடுபடுத்தினர். ஒவ்வொரு கூட்டத்திற்கும் அரங்கம் நிறைய மக்கள் கூடினர். மக்களின் ஆர்வம் மிகுதியாயிருந்தது.

இந்தக் கூட்டம் முடிந்தபின்பு நான் சியாட்டில் பட்டணத்தில் தங்கியிருந்து அவ்வாரத்தின் இறுதி நாட்களில் அசெம்பிளி ஆப் காட் சபையில் ஊழியம் செய்தேன். உள்ளூர் ஊழியக்காரர் இந்தக் கூட்டங்களைக் குறித்து ஒருவருக்கொருவர் பேசுவதைக் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நான் ஏற்கெனவே சியாட்டில் பட்டணத்தில் ஊழியம் செய்திருந்தபடியால் இந்த ஊழியக்காரரில் அநேகரை நான் அறிவேன். அவர்களனைவரும் தங்களுடைய உண்மையான கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்களுடைய கருத்துக்களின் சாராம்சம் இதுதான்: "இதுவரை சியாட்டில் பட்டணத்தில் நடைபெற்ற கூட்டங்களெல்லாம் இந்தக் கூட்டத்தைப் போன்று மிகப்பெரிய அசைவை என்றும் ஏற்படுத்தியதில்லை." ஆனால் இதில் உள்ள மிகவும் சிறப்பான காரியம் என்னவென்றால் சியாட்டில் பட்டணத்தை அசைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தக் கூட்டங்கள் ஒழுங்கு

செய்யப்படவில்லை. ஆனால் ஊழியக்காரரின் போக்குவரத்துச் செலவுக்காகத்தான் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. இது தான் உண்மை.

திங்கட்கிழமை காலையில் நான் சியாட்டில் பட்டணத்திலிருந்து எனக்கு அடுத்த கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அட்லாண்டா பட்டணத்திற்கு விமானத்தில் பயணம் செய்தேன். விமானப் பயணம் தான் தியானத்திற்குச் சிறந்த இடமாகும். தொலைபேசி அழைப்பு அங்கு இராது; மக்களுடைய தொந்தரவும் இல்லை. நீங்கள் உங்கள் ஆசனத்தில் அமர்ந்து தியானம் செய்யலாம். அப்படி உட்கார்ந்திருக்கையில் எனக்குள்ளாகவே நான் இவ்வாறு கூறிக் கொண்டேன்: "இது விநோதமாக இல்லையா? பட்டணத்தில் அசைவு ஏற்படுத்தும் நோக்கத்திற்கல்லாமல் வேறு நோக்கத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்கள், இந்த நோக்கத்திற்காகவே ஒழுங்கு செய்யப்படும் கூட்டங்களைக் காட்டிலும் அதிகமான அசைவினை ஏற்படுத்தியது." அந்தச் சமயத்திலிருந்து தேவன் என்னோடு தெளிவாக, ஆனால் மெல்லிய குரலில், அமைதலான முறையிலும் உறுதியான முறையிலும் பேச ஆரம்பித்தார். அவர் கூறியது இதுதான்: "யாரிடத்தில் எனக்கு அதிகமான பிரச்சனை இருந்தது- யோனாவிடத்திலா? நினிவே பட்டணத்திலா?" எனக்குச் சொல் என்றார். நான் சிறிது நேரம் யோசித்துவிட்டு "ஆண்டவரே, நீர் யோனாவை சரியான பாதையில் செலுத்தியபோது நினிவே பட்டணத்தில் உமக்கு எந்தவிதமான பிரச்சனையும் இல்லை" என்றேன். அதற்கு தேவன் "இந்த ஊழியக்காரர் சரியான பாதையில் செல்லும்போது மக்களிடத்தில் எனக்கு எந்தவிதமான பிரச்சனையும் இல்லை" என்றார்!

நானும் ஒரு ஊழியக்காரன். ஆதலால் நானும் இதுபற்றி யோசித்தேன். "மற்ற ஊழியக்காரர் சரியான பாதையில் நடக்கும்போது. . ." என்று தேவன் கூறவில்லை. ஆனால் "ஊழியக்காரர் சரியான பாதையில் செல்லும்போது" என்று தேவன் கூறினார். எனவே மற்ற ஊழியக்காரரோடு என்னையும் சேர்த்துத்தான் தேவன் கூறுகிறார் என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

நான் அட்லாண்டாவுக்கு வந்தபோது தேவன் இந்த முறையிலேயே என்னை நடத்த ஆரம்பித்தார். என்னுடைய கூட்டங்கள் ஹோட்டலில் நடந்தன. இரு கூட்டங்களுக்கு இடையில் நான் ஹோட்டல் அறைகள் ஒன்றில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தேன். அப்போது என் மனம் வெறுமையாய் இருந்தது. நமது மனது அதிகமாக யோசனையில் ஆழ்ந்திராதபோது தேவன் நமது கவனத்தை வெகு சீக்கிரம் அவர்பால் திருப்புவார். நான் அவ்வாறு அமைதியாய் இருந்தபோது, எனக்கு அநேக வார்த்தைகள் ஞாபகத்திற்கு வந்தன. அவைகள் பெரும்பாலானவை இடத்தின் பெயர்களாகும். அவைகள் அனைத்தும் ஒரு வெள்ளைத்தாளில் எழுதி என் கண் முன் வைத்ததுபோல் அவ்வளவு தெளிவாக இருந்தன. அந்த வார்த்தைகள் இவைகள் தான்: "கேரீத்திலிருந்து சாரிபாத்; சாரிபாத்திலிருந்து கர்மேல்; கர்மேலிலிருந்து ஓரேப்; ஓரேப்பிலிருந்து மற்ற வாழ்க்கைக்கு." இந்த இடங்களின் பெயர்களெல்லாம் எலியாவின் வாழ்க்கையில் அடுத்தடுத்த வெற்றிகளை ஏற்படுத்திக் கொடுத்தன: கேரீத்திலிருந்து சாரிபாத், சாரிபாத்திலிருந்து கர்மேல், கர்மேலிலிருந்து ஓரேப்.

நான் இதைக் குறித்து சிந்திக்க ஆரம்பித்தேன். எலியாவின் ஊழியத்தின் உச்சநிலை கர்மேல் பர்வதத்தில் இருந்தது. இங்கு

எல்லா இஸ்ரவேல் மக்களையும் கூட்டிச் சேர்த்தார். அங்கே பாகாலின் தீர்க்கதரிசிகள் 850 பேருக்கு சவால் விட்டார். வானத்திலிருந்து அக்கினியை வரவழைத்து, அனைத்து இஸ்ரவேல் மக்களும் தாழ விழுந்து வணங்கி "கர்த்தரே தெய்வம்" என்று கூறும்படிச் செய்தார். ஒரு தனி மனிதனுக்கு வெற்றி கிடைத்தது என்று கூறுவோமென்றால், அது கர்மேல் பர்வதத்தில் எலியாவுக்குக் கிடைத்த வெற்றியேயாகும்.

ஆனால் சில நாட்களுக்குப் பின்பு எலியா, சூனியக்காரப் பெண்ணாகிய யேசபேலுக்குப் பயந்து ஓடிப்போகிறதையும், என்னுடைய பிராணனை எடுத்துக் கொள்ளும் என்று தேவனிடம் கேட்டதையும் தேவன் எனக்குக் காட்டினார். கர்மேலில் பெற்ற வெற்றி மகத்தானது! அடுத்ததாக எனக்கு இப்படி ஓர் எண்ணம் உண்டானது: ஒருவேளை தேவன் எலியாவின் விண்ணப்பத்திற்குச் செவிகொடுத்து அவரது உயிரை எடுத்திருந்திருப்பாரென்றால் அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த பணி முற்றுப்பெறாமல், அவருக்குப்பின் ஆவிக்குரிய ஓர் ஊழியக்காரனை எழுப்பாமலும் உயிர் துறந்திருப்பார். அவருடைய பணியை எடுத்துச் செய்து முடிக்க ஒருவரும் இல்லாமற் போயிருப்பார்கள். ஆனால் ஓரேப் சென்று அங்கு தேவனை முகமுகமாய்ச் சந்தித்து தேவனுடைய திட்டத்தை அறிந்து கொண்டபோது அது தன்னுடைய திட்டத்திற்கு நேர்மாறானது என்பதை அறிந்து கொண்டார்.

"எலியாவே நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்" என்று தேவன் கேட்டார். "நான் சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்திவைராக்கியமாயிருந்தேன். . ." என்று கூறினதுமல்லாமல் தன்னுடைய வெற்றிகளையும் பட்டியலிட்டுக் கூறுகிறார். ஆனால் தேவன் "அதெல்லாம் எனக்குத் தெரியும் எலியாவே, ஆனால் நீ இங்கே என்ன செய்து

கொண்டிருக்கிறாய்?" என்று கேட்கிறார். எலியா தான் செய்த எல்லாவற்றையும் பற்றிக் கூறி முடித்தபின்பு, தேவன் எலியாவை நோக்கி அடுத்ததாக அவர் என்ன செய்ய வேண்டுமென்று கூறுகிறார். "நீ மூன்று பேரை அபிஷேகம் பண்ண வேண்டும்: எலிசாவை உனது பதவியிலே தீர்க்கதரிசியாகவும், ஆசகேலை சீரியாவின் மேல் ராஜாவாகவும் யெகூவை இஸ்ரவேலின் மேல் ராஜாவாகவும் அபிஷேகம் பண்ணவேண்டும்" என்று கூறுகிறார். இதற்குப் பின்பு இராஜாக்களின் புத்தகத்தில் வரும் அத்தியாயங்களை வாசிப்பீர்களென்றால், ஓரேப் பர்வதத்தில் தேவனுக்கும் எலியாவுக்கும் நடந்த உரையாடலினால் உருவாக்கப்பட்ட இந்த மூன்று பேரும், எலியாவுக்குத் தேவன் கொடுத்த பொறுப்பை பின்னாளில் நிறைவேற்றுவதை நாம் காணலாம். நிறைவேற்றப்படாத காரியங்களே ஏதும் இல்லை. உண்மையில் எலியாவால் இந்தக் காரியங்களை நிறைவேற்ற முடியவில்லை. ஆனால் இவற்றை முடிக்க ஏற்ற நபர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்தார்.

இவைகளெல்லாம் எனது மனதில் தோன்றியபோது தேவன் என்னோடு நேரடியாகப் பேசுவதை உணர்ந்தேன். எனக்கு முன்பதாக இரண்டு பொறுப்புகள் இருப்பதை தேவன் காட்டினார். ஒருபுறம் எனது சொந்தக் காரியங்களைச் செய்யவும், தேவனுடைய வல்லமையையும், விசுவாசத்தையும் உபயோகித்து சில சொந்த வெற்றிகளைப் பெறத்தக்கதாக சொந்த ஊழியத்தைச் செய்வதும் ஆகும். ஆனால் இதற்கு எனக்கு நிரந்தரமான பலன் கிடைக்கப்போவதுமில்லை, இந்த ஊழியத்தை எனக்குப் பின் எடுத்துச் செய்ய ஊழியக்காரர் எவரும் இருக்கப்போவதுமில்லை. ஆனால் மாறாக தேவன் எனக்கு வேறு மாற்றுத் திட்டத்தைக் காட்டினார். உன்னைக் குறித்து மிகவும் பேராசைப்படாதே. உன்னுடைய ஊழியத்தை

முன்னேற்றப்பாதையில் நடத்திச் செல்லாதே. உன்னுடைய காரியங்களையே செய்யாதே. *மற்றவர்களுடைய வாழ்க்கையில் முதலீடு செய்;* மற்றவர்கள் புகழைப் பெறட்டும். நீ விட்டுச் செல்கின்ற இடத்தை மற்றவர்கள் எடுத்துக் கொள்ளட்டும். உன்னை விட அவர்கள் அதிக வெற்றியைப் பெறட்டும்.

நான் எப்போதும் வெற்றியுள்ளவனாகவே இருந்தேன். நான் இதைப் பெருமையாகச் சொல்லவில்லை. நான் பன்னிரண்டு வயது பையனாக இருக்கும்போது தலைமை மாணவனாகவும், பள்ளி மாணவர் தலைவனாகவும், முதிய கல்வியாளனாகவும், கல்லூரியில் இளைய அறிவாளியாகவும் இருந்தேன். நான் எல்லாவற்றிலும் வெற்றியை எதிர்நோக்கியிருந்தேன். ஆனால் இதைவிட உயர்ந்த வெற்றிகள் உண்டு என்பதை தேவன் எனக்குக் காட்டினார். உங்கள் கையிலுள்ள அந்தச் சிறிய கோதுமை மணி கீழே விழுந்து மடிந்து போகட்டும். அதன் விளைவுகளை தேவன் பொறுப்பேற்றுக் கொள்வார்.

இதனை நான் உங்களிடத்தில் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன் – நான் மிகவும் சாதாரணமானவன். ஏனெனில் நான் எல்லாவற்றையும் இழக்கவும் தேவனை என் வாழ்வில் அனுமதிக்கவும் செய்தேன். இன்னுமொரு பிசாசை நான் துரத்த முடியவில்லை என்றால் அதற்காக நான் கவலைப்படவில்லை. தேவன் இதனை நான் செய்ய வேண்டுமென்று விரும்பவில்லை என்றால், அதைக் குறித்து நான் கவலைப்படவில்லை. மற்றுமொரு கூட்டத்தை நடத்தாவிட்டாலோ அல்லது மற்றொரு புத்தகத்தை எழுதாவிட்டாலோ நான் கவலைப்படவில்லை. நான் பொது வாழ்வில் மக்களுடைய கண்களில் படாமல் மறைந்திருக்கவேண்டுமென்று தேவன் நடத்துவாரென்றாலும் நான்

கவலைப்படவில்லை. நான் செய்தவற்றிற்கான பலன் கிடைக்கும். என்னில் எவ்வளவு தாலந்து உள்ளது என்றும் எனக்குத் தெரியாது; நான் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. ஆனால் என்னிடத்திலுள்ளதை நான் விருப்பத்துடன் கொடுக்க விரும்புகிறேன். அது கடந்து செல்ல அனுமதிக்க ஆயத்தமாயுள்ளேன். இதன் பலனாக நான் மிகமிக மகிழ்ச்சியாக இருக்கிறேன். நான் எந்தவித பிரச்சனையுமின்றி இலகுவாக இருக்கிறேன். பிரச்சனை இல்லாமல் விடுதலையுடன் இருப்பது எப்படி என்று எனக்குத் தெரியும். சுதந்தரத்தைப் பற்றி எனக்கு பிரசங்கம் செய்யத் தெரியும். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக சிறந்த காரியம் விடுதலையுடன் இருப்பதாகும். தேவனுக்கு முன்பாக நான் உண்மையாகக் கூற விரும்புவதெல்லாம் 'நான் விடுதலையுடன் இருக்கின்றேன்" என்பதே.

7
கடந்து செல்ல அனுமதித்தல்

சில நாட்களுக்கு முன்பு "இரகசியம்" என்கிற வார்த்தையால் நான் மிகவும் கவரப்பட்டேன். இந்த வார்த்தை வேதத்தில் அநேக இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

உதாரணமாக *''...மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம்"* என்று 1 கொரிந்தியர் 2:7ல் பவுல் கூறுகிறார். புதிய மொழிபெயர்ப்பில் "...ஆனால் நாங்கள் *இரகசியமானதும் மறைக்கப்பட்டதுமான தேவ ஞானத்தையே போதிக்கிறோம்*" என்று கூறப்பட்டுள்ளது. எனவே இரகசியமான தேவ ஞானம் என்று ஒன்று உண்டு. அது மற்ற எல்லா மக்களின் மனதினின்றும் மறைக்கப்பட்டதாகும். என்னைப் பொறுத்தவரையில் அந்த இரகசியமான மறைக்கப்பட்ட ஞானத்தைப் பெற்றுக்கொள்ள எனக்கு மிகுந்த வாஞ்சை உண்டு.

சங்கீதம் 51:6ல் தாவீது இவ்வாறு கூறுகிறார்:

இதோ, உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர்; அந்தக்கரணத்தில் ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்.

"அந்தக்கரணத்தில் (மறைவிடத்தில்) உள்ள ஞானம்" என்ற இச் சொற்றொடரை கவனியுங்கள். இந்த மறைவிடத்திலுள்ள தேவ ஞானத்தைக் குறித்து தான் பவுல் 1 கொரிந்தியர் 2:7ல் குறிப்பிடுகிறார்.

இரகசியமான இடம், இரகசியமான ஞானம், இரகசியமான அறிவு – இவற்றைக் குறித்து வியத்தகு வகையில் நான் கவரப்பட்டுள்ளேன். ஆனால் இது குறித்து ஒரு நிபந்தனையை நாம் நிறைவேற்றவேண்டும். ஒரு பொருள் இரகசியமானதாகவோ மறைவானதாகவோ இருக்குமென்றால் அது கண்ணுக்குத் தெரியாததாக இருக்கும். எனவே நாம் அந்த இரகசியமான இடத்தில் இருந்து இரகசியமான ஞானத்தை அறிந்து கொள்ள விரும்பினால் நாமும் மறைந்திருக்க ஆவலுள்ளவர்களாக இருக்க வேண்டும். நம்முடைய ஆள்த்தத்துவம், நமது புகழ், நான் என்ற தன்னலம் இதற்கு இடையூராக இருக்கலாம். இவை நம்மிலிருந்து நீங்கும்படி நாம் அனுமதிக்க வேண்டும் – இவைகள் நிலத்தில் விழுந்து மடிந்து போகச் செய்ய வேண்டும்.

சிறிது நேரம் இயேசுவின் வாழ்க்கையைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். அவர் மனிதனாக வெளிப்பட்டதிலிருந்து முப்பது ஆண்டுகள் பெற்றோருடன் வாழ்ந்து வந்தார். மூன்றரை ஆண்டுகள் ஊழியத்திலும் ஏறத்தாழ 2,000ம் ஆண்டுகளாக பரிந்து பேசுவதிலும் ஈடுபட்டிருக்கிறார். நீங்கள் இந்த மாதிரியான வாழ்வுக்குத் தயாராக இருக்கிறீர்களா? உண்மையான பலம் வேண்டுமா? தேவனுக்காக உலகை ஆள்பவர்கள் எல்லாம் ஜெபவீரர்கள்தான். இவர்களில் பெரும்பாலானோர் மக்களால் அறியப்படாமல் உள்ளனர். நீங்கள் தாழ்ந்துபோக விரும்புகிறீர்களா?

இந்த உலக மக்களுடைய கண்களுக்கு முன்பாக இயேசு கடைசியாக காட்சியளித்தது எப்போது? சிலுவையில். இப்போது அவர் உலகத்தில் காட்சியளிப்பது எவ்வாறு? அவருடைய சீடர்களின் ஊழிய தளத்தில் தான். அவர் நிலத்தில்

விதைக்கப்பட்டு மரித்ததாலே பலன் உண்டாயிற்று. அவ்வழியே செல்ல நீங்கள் ஆயத்தமா? உங்கள் ஈசாக்கை அணைத்து வைத்திருக்கிறீர்களா? "கர்த்தர் எனக்குக் கொடுத்தார். எனவே இது என்னுடையது" என்று நீங்கள் கூறுகிறீர்கள். "அதனைத் திருப்பிக் கொடு, பலிபீடத்தின் மேல் வை. கத்தியை எடு, என்னுடைய வழியின்படி, எனக்கேற்ற பிரகாரமாய், நான் விரும்பும் நேரத்தில் எனக்கு அதைக் கொடுப்பாயென்றால், நான் அதை ஆசீர்வதித்து உன்னுடைய சக்திக்கும், உனது அறிவுக்கும், நினைவுக்கும் மேலாய் நான் அதை ஆசீர்வதிப்பேன்" என்று தேவன் கூறுகிறார்.

சில வருடங்களுக்கு முன்பு நான் தேவனிடத்தில் இவ்வாறு ஜெபித்தேன். நான் இனிமேல் ஆவிக்குரிய பிரசங்கங்களைச் செய்யப்போவதில்லை. நான் பிரசங்கிக்கும்போது அந்தக் கருத்துக்களின் பேரில் மக்கள் செயல்பட அவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுப்பேன். இதனை நீர் செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். யார் மீதும் நான் எதையும் திணிக்க விரும்பவில்லை. தங்களுடைய ஈசாக்குகளைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுகிற அநேகர் உண்டு; அவர்கள் "இது என்னுடையது. தேவனே, நான் இதனைக் கட்டினேன், நான் நிறுவினேன்" என்று கூறுகிறார்கள். உங்களுடைய ஈசாக்கு ஒரு வேளை உங்களுடைய செல்லப் பிள்ளையாக இருக்கலாம். அப்பிள்ளையை நீங்கள் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கலாம். தேவன் கூறுகிறார்: "அதனை எனக்காக விட்டுக் கொடுப்பாயா?" ஒரு வேளை அது உங்களுடைய தாலந்தாகவோ, உங்களுடைய ஊழியமாகவோ அல்லது விசேஷித்த சூழ்நிலையாகவோ இருக்கலாம். ஒரு வேளை தேவன் உண்மையில் உங்கள் உள்ளத்தில் பேசியிருப்பாரென்றால் உங்களுடைய ஈசாக்கைக் கொண்டு

வந்து பலிபீடத்தின் மேல் வைக்கும்படி உங்களை ஊக்குவிக்கிறேன்.

நீங்கள் பின்பற்றிக் கூற வேண்டிய சில வார்த்தைகளை கீழே கொடுத்துள்ளேன்:

அன்புள்ள ஆண்டவரே,

என்னுடைய சுய சித்தத்தைச் செய்து கொண்டு, நீர் கொடுத்த சில காரியங்களை எனக்கென்று சொந்தமாக்கிக் கொண்டிருப்பதால் என்னுள்ளத்தில் சந்தோஷம் இல்லை. எப்போதும் என்னுள்ளத்தில் சோகத்தையே காண்கிறேன். அந்த குறிப்பிட்ட காரியம் (உங்களுக்கு எது பொருந்துமோ அதைக் குறிப்பிடுங்கள்; உங்கள் ஊழியமோ, ஒரு முக்கியமான ஆளோ, ஒரு தாலந்தோ அல்லது எதுவானாலும் சரி).

உமது பரிசுத்த ஆவியின் மூலமாய் அந்த ஈசாக்கை விட்டுவிட்டு உம்மிடத்தில் ஒப்புக் கொடுக்க எனக்குக் கிருபையைத் தாரும் என்று ஜெபிக்கிறேன். விட்டுக்கொடுத்தலின் விளைவுகளை நீர் பொறுப்பேற்றுக் கொள்வீர் என நான் நம்புகிறேன்.

இதனை இயேசுவின் மூலம் கேட்கிறேன் நல்ல பிதாவே.

ஆமென்.

ஆசிரியரைப்பற்றி. . .

டெரிக் பிரின்ஸ் (1915-2003) பிரிட்டிஷ் பெற்றோருக்கு இந்தியாவில் பிறந்தார். இங்கிலாந்தின் ஈட்டன் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கிரேக்கம் மற்றும் லத்தீன் மொழி அறிஞராகப் படித்த அவர், கிங்ஸ் கல்லூரியில் பண்டைய மற்றும் நவீன தத்துவத்தில் ஃபெல்லோஷிப்பைப் பெற்றார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் மற்றும் ஜெருசலேமில் உள்ள எபிரெய பல்கலைக்கழகத்தில் எபிரெய மற்றும் அராமிய மொழிகளை உள்ளிட்ட பல நவீன மொழிகளைக் கற்றார்.

இரண்டாம் உலகப் போரில் பிரிட்டிஷ் ராணுவத்தில் பணியாற்றிய போது, அவர் வேதத்தைப் படிக்கத் தொடங்கினார் மற்றும் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு வாழ்க்கையை மாற்றும் அனுபவத்தைப் பெற்றார். இந்த சந்திப்பில் இருந்த அவர் இரண்டு முடிவுகளுக்கு வந்தார். முதலில், இயேசு கிறிஸ்து உயிருடன் இருக்கிறார். இரண்டாவதாக, பைபிள் ஒரு உண்மையான, பொருத்தமான, தற்காலத்திற்கு ஏற்ற புத்தகம். இந்த முடிவுகள் அவருடைய வாழ்க்கையின் முழு போக்கையும் மாற்றியது, பின்னர் அவர் பைபிளைப் படிப்பதிலும், கற்பிப்பதிலும் தன்னை அர்ப்பணித்தார்.

பைபிளையும் அதன் போதனைகளையும் தெளிவாகவும் எளிமையாகவும் விளக்கும் டெரிக்கின் முக்கிய வரம், மில்லியன் கணக்கான உயிர்களில் நம்பிக்கையின் அடித்தளத்தை உருவாக்க உதவியது. அவரது சபை பிரிவு சார்பற்ற, பிரிவினைவாதம் இல்லாத அணுகுமுறை அவரது

போதனையை அனைத்து இன மற்றும் மத பின்னணியிலிருந்தும் மக்களுக்குச் சமமாக பொருத்தமானதாகவும் பயனுள்ளதாகவும் ஆக்கியுள்ளது.

அவர் 80க்கும் மேற்பட்ட புத்தகங்கள், 600 ஆடியோ மற்றும் 110 வீடியோ போதனைகளின் ஆசிரியர் ஆவார். அவற்றில் பல, 100க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிப்பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அவரது தினசரி வானொலி ஒலிபரப்பு அரபி, சீன (அமோய், கான்டோனீஸ், மாண்டரின், ஷாங்காயீஸ், ஸ்வாடோ), குரோஷின், ஜெர்மன், மலகாஸி, மங்கோலியன், ரஷ்யன், சமோவான், ஸ்பானிஷ், பஹாசா இந்தோனேசிய மற்றும் டோங்கன் மொழிகளில் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. வானொலி நிகழ்ச்சி தொடர்ந்து உலகம் முழுவதும் பலரைச் சென்றடைகிறது.

டெரிக் பிரின்ஸ் மினிஸ்ட்ரீஸ் அவரது போதனைகளுடன் 140க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள விசுவாசிகளை சென்றடைவதைத் தொடர்கிறது. "இயேசு திரும்பும் வரை" தொடர வேண்டும் என்ற ஆணையை நிறைவேற்றுகிறது. ஆஸ்திரேலியா, கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மணி, இந்தியா, இந்தோனேஷியா, மலேசியா, மியான்மர், நேபாளம், நெதர்லாந்து, நியூசிலாந்து, நார்வே, பாகிஸ்தான் ரஷ்யா, தென்னாப்பிரிக்கா, சுவிட்சர்லாந்து, யுனைடெட் கிங்டம், அமெரிக்கா மற்றும் பசிபிக் தீவுகள் ஆகிய நாடுகளில் உள்ள முதன்மைப் பணிகள் உட்பட, உலகெங்கிலும் உள்ள 30க்கும் மேற்பட்ட டெரிக் பிரின்ஸ் அலுவலகங்கள் மூலம் இது செயல்படுத்தப்படுகிறது.

இவை மற்றும் பிற உலகளாவிய இருப்பிடங்களைப்
பற்றிய தற்போதைய தகவலுக்கு, இங்கு செல்க :
www.derekprince.com

உங்கள் ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப, புத்தகங்கள் வாங்க மற்றும் மேலும் விபரங்களுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

For orders, prayer requests & other enquiries please contact :

DEREK PRINCE MINISTRIES - INDIA
C/o DPM EXIM
A-40, Anna Nagar Main Road,
Sivapragasam Salai, Tennur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201/03

உங்கள் காணிக்கைகளையும், நன்கொடைகளையும் மேலிருக்கும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

You can also send your offerings and contributions towards this ministry to the above address.

ஃபேஸ்புக்கில் எங்களது முகவரி:

Find us on Facebook, by typing:

Derek Prince Ministries - India





Visit our WEBSITE:

www.derekprince.com/ta